ஸ்ரீ:

# குமாரஸம்பவம்.

தேவதாஸ்வரூபமுள்ளதும் குன்றுகளுக்கரசுமான இமயமலை, கிழக்கு மேற்கு ஸமுத்திரங்களைத் தொட்டுப் பரவி நிற்பதால், பூமிக்கு ஓர் அளவுகோலோ என்று தோன்றுமாறு வடதிசையில் இருக்கின்றது. (1

முன்பு பிருது சக்கரவர்த்தியின் கட்டளைப்படி மற்றை மலைகளெல்லாம் இந்த இமயமலையைக் கன்றாகவும் மஹாமேரு பர்வதத்தை கறக்கத் தெரிந்த இடையனாகவும் ஏற்படுத்திக் கொண்டு, பூமியிலிருந்து ஒளியேறிய இரத்தினங்களையும் மஹிமை பொருந்திய ஔஷதிகளையும் கறந்தன. (2

---

## குறிப்பு.

குமாரஸம்பவம்—குமாரனுடைய ஸம்பவத்தைச் சொல்லுகின்ற காவியம். குமாரன் - ஸுப்பிரமணியன். ஸம்பவம் = பிறப்பு.

இப்பொழுது, குமாரஸம்பவம் பதினேழு ஸர்க்கமாகப் பம்பாயில் அச்சியற்றி வெளிப்படுத்தப்பட்டிருப்பினும், உண்மையில் எட்டுஸர்க்கங்கள் தாம் காளிதாஸர் செய்தவை. ஆகையால்தான் இது 'குமாரஸம்பவம்' என்ற பெயர்பெற்றது. இல்லையேல், "சிசுபாலவதம்" என்பதுபோல "தாரகவதம்" என்றோ, "ஹரவிஜயம்" என்பதுபோல "குமாரவிஜயம்" என்றோ பெயர் இடப்பட்டிருக்கும். எட்டாவது ஸர்க்கம் காளிதாஸருடையதன்று என்று சிலரும், நான்காம் ஸர்க்கம் காளிதாஸருடையதன்று என்று மற்றுஞ்சிலரும் கூறுவர். இதன் விரிவை முகவுரையில் காணலாம்.

1. பூமி, இமயமலை முதலியவைகளுக்கு, நம் கண்ணிற்படும் மண்ணுருவம் மலையுருவம்முதலியவைகளைத் தவிர தேவதையுருவமும் வேறொன்றுண்டு. ஆகையால் தான் "பூமி பேசினாள், இமவான் பேசினான்" என்று கூறுவது பொருந்துகின்றது.

2. பிருது சக்கரவர்த்தியின் சரித்திரத்தை விஷ்ணு புராணம் முதலியவைகளில் விரிவாய்க் காணலாம்.

இந்த இமயமலை, சிறந்த பல வஸ்துக்களுக்கும் விளைநிலமாயிருப்பதால் இதில் நிற்கும் பனி இதன் அழகை அழிக்கக்கூடியதாயில்லை. சந்திரனுடைய கிரணங்களில் அவனது மாசு மறைவதுபோல, ஓரிடத்தில் பலகுணங்களும் ஒரு தோஷமுமிருப்பின் அந்தத் தோஷம் அந்தக் குணங்களில் மறைந்து விடுகின்றது. (3)

இந்த இமயமலையின் கொடுமுடிகளில் தாதுக்களென்ற நற்செங்கற்பொடிகள் (காவிக்கற்பொடிகள்) பரவிக்கிடக்கின்றன. அவைகளைக் குழைத்து அப்ஸரஸ்திரீகள் தங்களுடைய கன்னங்களிலும் மார்பிலும் இலைபோலவும் கொடிபோலவும் மீன்போலவும் சித்திரம் வரைந்து அலங்கரித்துக்கொள்வதுண்டு.

---

3. "பலகுணங்களிருப்பின் ஒருதோஷம் அவைகளுள் மறைந்து விடுகின்றது என்று ஒரு கவி கூறுகின்றார். ஆனால் வறுமை என்னும் தோஷம் ஒரு மனிதனுக்குள்ள எல்லாக் குணங்களையும் கெடுத்துவிடுகின்றது. இதனை அக்கவி மறந்துவிட்டார்." என்று கடகர்ப்பரன் எழுதுகின்றான். "இந்தச்செய்யுள் இமயமலையைப் புகழ்கின்றதா?. இகழ்வதாகவன்றோ நினைக்க இடம் தருகின்றது. அதற்கு ஒருதோஷமுண்டு; ஆயினும் குற்றமில்லை என்று சொல்வதைவிட இவ்விஷயத்தைப் பற்றி ஒன்றும் பேசாமலிருப்பதல்லவா மேலானது". என்று சிலர் ஆக்ஷேபிக்கின்றனர். நிர்தோஷனான ஈசுவரனொருவனைத் தவிர்த்து மற்றை வஸ்துக்கள் எல்லாம் குணமும் தோஷமும் கலந்திருப்பவைகளே. அவ்வாறிருக்கும்பொழுது ஒரு தோஷமுள்ள பதார்த்தம், ஈசுவரனுக்கு அடுத்தபடியிலே வைக்கக் கூடியதல்லவா? ஆகையால் இங்கு இமயமலை புகழ்ந்தே கூறப்பட்டதாம். எனக்கொள்வது தகும். "குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" எனவருங் குறட்பாவும் இங்குக் குறிக்கத்தக்கது. அழகெனத் தமக்குத் தோன்றும் ஒரு விஷயத்தைச் சிறு சிறு மாற்றங்களுடன் ஆங்காங்கு வர்ணிப்பது காளிதாஸருடைய வழக்கம். இதனை அவ்வவ்விடங்களில் காட்டுவோம். இங்குச் சந்திரனுடைய மாசினால் அவனுக்குக் குறைவு உண்டாகவில்லை என்று எழுதுகிறார். சாகுந்தலத்திலோ சந்திரனுடைய மாசு அவனுக்கு ஓரழகைக் கொடுக்கின்றது என்று சொல்லுகிறார்.

4. இங்கு நற்செங்கற்பொடிகள் எப்பொழுதுமிருப்பதால் அவைகளுக்கு உபமானமாகிய அந்திக்கு "காலவரையற்ற" என்றவிசேஷணம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனது பற்றியே இங்கு உத்ப்ரே

அப்பொடிகள் கொடுமுடிகளில்படிந்திருப்பதால் அக்கொடுமுடிகள் செக்கச்செவேலென்றுஎப்பொழுதும்காணப்படுகின்றன. இந்நிலைமையைக்கண்டால், அங்குத் துண்டு துண்டாகச் சிதறிக்கிடக்கும் மேகங்களில் தனது செந்நிறத்தைப் பாய்ச்சிக்கொண்டு ஸந்தியாகாலமொன்று காலவரையின்றி எப்பொழுதும் விளங்குகின்றதோ எனத் தோன்றும். (4)

இந்த இமயமலையில் சிங்கங்கள் யானைகளைக் கொன்றுவிட்டுச்செல்லுகையில் அவைகளின் அடிச்சுவடுகளில்தோய்ந்து காணப்படவேண்டிய இரத்தம் பனிப்பெருக்கால் கழுவப்பெற்று இங்குக் காணப்படாவிடினும், யானைகளின் தலைகளிலிருந்தமுத்துக்கள் இந்தச் சிங்கங்களின் நகக்கண்களுக்கிடையில் முன்பு சிக்குண்டிருந்தமையால், அவைகள் செல்லும்பொழுது அந்த முத்துக்கள் உதிர்ந்து ஆங்காங்குக் காணப்படுவதைக்கொண்டு வேடர்கள், சிங்கங்கள் சென்றிருக்கும் வழியை ஊஹித்தறிகின்றார்கள். (5)

இந்த இமயமலையின் நடுப்பாகம் வரையில் மேகங்கள் உலாவுகின்றன. ஆதலால் மேற்பாகம் கொடுமுடிகளில் வெயிலும், கீழ்ப்பாகம் தாழ்வரையில் மேகங்களின் நிழலும் இருக்கின்றன. இவ்வாறிருக்கையால், ஸித்தர்கள் வேனிற்காலத்தில் வெயிலுக்கஞ்சி தாழ்வரைக்கு வந்து நிழலையும், மாரிக்காலத்

---

க்ஷாலங்காரம் இடம் பெற்றது. எப்பொழுதும் காணும் நற்செங்கற்பொடிகள், காலவரையற்ற ஸந்தியாகாலம் போலவும், அப்பொடிகளால் சிவந்தகொடுமுடிகள் அந்திவானத்தில் செந்நிறம் கலந்த மேககண்டங்கள் போலவும் உத்ப்ரேக்ஷிக்கப்படுகின்றன என்பதை உய்த்துணர்க. இங்கு மல்லிநாதருடைய உரை பலவாற்றாலும் பிழையுள்ளதாகையால் அதனை விடுத்து, அருணகிரிநாதருடைய கருத்தையே தழுவினோம்.

5. இரத்தினசாஸ்திரத்தில் முத்துக்கள் உண்டாகுமிடங்களுள் யானைத்தலையும் கூறப்பட்டிருக்கிறது.

6. "மேகலா" என்ற வடமொழிச்சொல்லுக்கு "நடுப்பாகம்" என்ற மொழிபெயர்ப்பு, அருணகிரிநாதரை அனுஸரித்துச் செய்யப்பட்டது. இதுவும் செய்யுள்கருத்தின் தகைமையால் கிடைத்தது. இவ்வாறு இங்குக் கூறியிருப்பதால், நான்காம் செய்யுளில் சிகரங்களி

இல் மழைக்குப் பயந்து கொடுமுடிக்குச் சென்று வெயிலையும் அனுபவிக்கின்றார்கள். (6)

இந்த இமயமலையில் பூர்ஜமரங்கள் எங்கும் நிறைந்திருக்கின்றன. இவைகளின் பட்டைகள் யானைத் தோல்களைப் போலக் கருத்தும் அகன்றும் நீண்டுமிருப்பதால் இவைகளை வித்தியாதரப்பெண்கள் பெயர்த்தெடுத்துப் பத்திரிகைகளாகச் செய்துகொண்டு, அங்குக் கிடைக்கும் நற்செங்கற்பொடிகளைக் குழைத்து மசியாக்கி, அந்த மசியினால் அந்தப் பட்டைப்பத்திரிகைகளில் தங்கள்மனத்திலுள்ளவைகளெழுதித் தங்களுடைய நாயகர்க்கு அவைகளைக் காமலேகங்களாக அனுப்புகிறார்கள். இவர்கள் அழகாய் எழுதியவட்ட வடிவமுள்ள எழுத்துக்கள், வயதைத் தெரிவிக்க யானைகளுக்குத் தோல்மீது விழும் புள்ளிகளைப்போலச் செவந்திருந்தன. (7)

இந்த இமயமலையின் குகை முகத்திலிருந்து கிளம்பும் காற்று, அங்குள்ள வண்டு துளைத்த மூங்கில்களினூட்புகுந்து வெளிவரும்பொழுது புல்லாங்குழல் ஊதுவதுபோல இனியதோர் ஒலி புறப்படுகின்றது. இதைப் பார்த்தால் அங்குப் பா

---

லுள்ள தாதுக்களுக்கும் "துண்டமேகங்களில் செந்நிறம் பாய்ச்சிய" என்ற அடைமொழியை மல்லிநாதர் சேர்த்திருப்பது பொருந்தாதென்றறிக.

7 "குஞ்ஜரபிந்து சோணா:" என்பது வடமொழிச் சொல். குஞ்சரங்களைப்போல (குஞ்ஜரங்களின் தோல்களைப்போல) பிந்து சோணங்களாயிருக்கின்ற பூர்ஜப்பட்டைகள் என்று எழுதிவிட்டு, யானைகளின் மீது விழும் பத்மகபிந்துகளை யொப்ப, தாதுமசியால் எழுதிய எழுத்துக்கள் சிவந்திருக்கின்றன என்று அருணகிரி கருத்துக் கூறுகிறார். "குஞ்சரபிந்துக்களையொப்பச் சிவந்திருக்கின்ற பூர்ஜப் பட்டைகளில் எழுதுகின்றார்கள்" என்று சிலர் பொருள் கூறுவது பிழையுள்ளது. இவர்கள் சுலோகத்தில் பதங்களுடைய வரிசையை உற்றுப் பார்ப்பாராக. "ந்யஸ்தாக்ஷரா: தாதுரஸேந ... குஞ்சரபிந்து சோணா:" என்றல்லவோ காளிதாஸர் எழுதியிருக்கிறார்.

8 "தாநம்" என்ற பதம் "சுருதி" என்று ஒருவாறு மொழிபெயர்க்கப்பட்டது. தாநமென்பது அம்சஸ்வரமென்று கூறி அதன் இலக்கணத்தையும் சில உரையாசிரியர் விரிவாகக் கூறியிருக்கின்றனர். "ஒத்

...OF, MADRAS...


டவிருக்கும் கின்னரர்களுக்கு உதவியாய் இந்த இமயமலை சுருதி கொடுக்கின்றதோ என்று தோன்றும். (8)

யானைகள், எப்பொழுதும் மதஜலம் பெருகுவதால் கன்னங்களுச் குண்டாகும் தினவு தீர அங்குள்ள ஆச்சாமரங்களில் தங்களுடைய கன்னங்களை உராய்ந்துக் கொள்கின்றன. அப்பொழுது அங்குப் பட்டை பெயர்ந்து அந்த இடத்திலிருந்து ஸுகந்தமுள்ள பால் பெருக, அதனால் இந்த இமயமலையின் தாழ்வரை முற்றிமே நல்ல வாஸனையுள்ளதாகின்றது. (9)

இந்த இமயமலையில் இரவில் குகைகளின் உட்புறத்தில் எங்கும் ஒளி பரப்பி விளங்கும் ஒஷதிகள், (ஜ்யோதிர்லதைகள் = ஒளிவீசும் கொடிகள்) அங்குக் குகைகளில் தமது மனைவிகளுடன் வந்து கூடிக் குலாவும் வேடர்களுக்கு எண்ணெய்யில்லாக்கலவி விளக்குகளாக இருந்தன. (10)

இந்த இமயமலையின் வழிகளிலெல்லாம் பனிக்கட்டிகள் நிறைந்து கிடக்கின்றன. இங்கு வரும் கின்னரஸ்திரீகள் வழிகளிலுள்ள பனிக்கட்டிகளில் காலை வைத்தவுடன் குளிர்ச்சியினால் இவர்களுடைய விரல்களும் அடிக்காலும் வாதைப்படுகின்றன. ஆயினும், இவர்களுடைய நிதம்பங்களும் ஸ்தனங்களும் பெருத்துச் சுமையாயிருப்பதால், மெதுநடையை விட்டு விரைவாக நடக்க இவர்களால் ஆகவில்லை. (11)

இந்த இமயமலை (கோட்டானைப்போல) பகலில் அஞ்சியதுபோலத் தனது குகையினுள் பதுங்கி வாழும் இருளைக் கதிரவனிடமிருந்து காப்பாற்றுகின்றது. தலை(கொடுமுடி) சிறந்து விளங்குவோர், தம்மை அடைக்கலம் புகுந்த (வீட்டிற்கு வந்த) வஸ்து எவ்வளவு கீழதாயினும் மேலதான வஸ்துவிற்போல அதனிலும் அபிமானம் கொள்வார். (12)

சமரிகள் தங்களுடைய வால்களை உயர்த்தி, அவைகளிலுள்ளவைகளும் வெளுப்பால் சந்திரகிரணங்கள் போன்றவைக

---

துவைதுவது" "சுருதி கொடுப்பது" என்பன பெரும்பாலும் பலருமறிந்த விஷயங்கள். இப்பொழுது தானம் 'தகனம்' என்று வழங்கிவருகிறது.

ளுமான சாமரங்களை எங்கும் காந்தி பரவுமாறு நாற்புறமும் (ராஜோபசாரம் போல) வீசிக்கொண்டிருப்பதால், "குன்றங்களுக்கரசு" என்று இந்த இமயமலைக்கு ஏற்பட்டிருக்கும் பெயர், உண்மையில் அதற்குரியதாகவே இருக்கின்றது. (13)

இந்த இமயமலையின் குகைகளில் ஊடாடக் கின்னர தம்பதிகள் வந்து கூடுகின்றார்கள். அப்பொழுது புருஷர்கள் பெண்டிரின் வஸ்திரங்களை அவிழ்க்க முயலவே, அந்த ஸ்திரீகள் வெட்கி, "என்ன செய்வது" என்று திகைத்துத் தவிக்குங்கால் குகைத் துவாரத்தில் திடீரெனத் தோன்றி தொங்கி நிற்கும் மேகங்கள், வெளிச்சத்தை மறைக்கும் திரைகளாகின்றன. (14)

கங்காப்ரவாகத்தின் சிறுதிவலைகளைச் சேர்த்துக்கொண்டும் தேவதாருவிருக்ஷங்களை அசைத்துக்கொண்டும் மயில்களின் தோகைகளை விரித்துக்கொண்டும் வீசுகின்ற இந்த இமயமலையின் காற்றை, மிருகங்களைத் தேடித் திரிந்து களைப்புற்ற வேடர்கள் தங்களது விடாய் தீர ஆதரவுடன் ஏற்கின்றார்கள். (15)

இந்த இமயமலை ஸூரிய மண்டலத்தையும் தாண்டி உயர்ந்திருக்கின்றது. இந்த இமயமலையின் மேற்புறத்திலும் பல தாமரைப் பொய்கைகளிருக்கின்றன அவைகளிலுள்ள பூக்களை ஸப்தருஷிகள் பூஜைக்காகக் கொய்து செல்லுகின்றனர். எஞ்சியுள்ள புஷ்பங்களைக் கீழ்ப்புறமாகச் சுற்றித் திரியும் ஸூரியன் தனது கிரணங்களை மேன்முகமாகச் செலுத்தி அவைகளால் மலர்த்துகின்றான். (16)

---

15. காற்றிற்குக் குளிர்ச்சி மணம் மென்மை ஆகிய மூன்று குணங்கள் இருக்கவேண்டும். இவை முறையே அடைமொழிகளால் தெரிவிக்கப் படுகின்றன. மயிலின் தோகைகளை விரிப்பதால் காற்றின் மென்மை வெளியிடப்பட்டது. வலிய காற்றாயின் தோகைகளைச் சிதறவடிக்குமன்றோ. காக்கை முதலிய பறவைகளின் இறகுகளை மெல்லிய காற்று விரிப்பதை நாம் காண்கின்றோம். "வேகமாய்ச் செல்வதற்காக வேடர்கள் இடையில் மயிற்றோகைகளை கட்டிக்கொள்வதுண்டு. அந்தத் தோகைகளைக் காற்று விரிக்கின்றது" என்பது மல்லிநாதருரை.

இந்த இமயமலை யாகத்திற்குரிய பற்பல வஸ்துக்களுக்கும் விளைநிலமாயிருப்பதையும், பூமியைத் தாங்க இதற்குள்ள வலிமையையும் கண்டு பிரமதேவர் இந்த இமயமலைக்கு யாகத்தில் ஹவிர்ப்பாகமொன்று ஏற்படுத்தியதும் தவிர "மலையரசு" என்ற பட்டமும் சூட்டித் தாமே அவ்வாறு அழைத்தலும் செய்தார். (17)

மேருமலைக்குத் தோழனான இந்த இமவான், உலகமுறை அறிந்தவனாகலின் தனது மரபு செழிப்பதற்காகப், பித்ரு தேவதைகளின் மனத்திலிருந்து உதித்தவளும், முனிவரும் போற்றும்படியிருப்பவளும், தனக்கு ஒத்தவளுமாகிய மேனை என்பாளை விதிப்படி மணந்தான். (18)

இந்த மேனை மைநாகன் என்ற பிள்ளையைப் பெற்றாள். இந்த மைநாகன் மலையுருவத்தில் பாதாளலோகம்வரை அமிழ்ந்திருப்பதால், அங்குள்ள நாககன்னியர் இந்தமலையில் வந்து விளையாடுகின்றனர். இவனுக்கும் ஸமுத்திரத்திற்கும் நெருங்கிய நேசமுண்டு. ஒருஸமயம் இந்திரன் கடுங்கோபத்துடன் தனது வஜ்ராயுதத்தால் மற்றைப் பர்வதங்களின் சிறகுகளை அறுக்கும்போது இந்த மைநாகன் தன்னிடம் நட்புள்ள ஸமுத்திரத்தினுட்புகுந்து ஒளிந்தான். ஆகையால், வஜ்ராயுதத்தால் சிறகுகள் வெட்டுறும்பொழுது உண்டாகக்கூடிய வேதனையை இவன் அறிந்தவனல்லன். (19)

---

17. இமயமலையை வர்ணிக்கின்ற செய்யுட்களுள் இச்செய்யுள் இறுதியானது. முதற்செய்யுளில் கூறிய "குன்றங்களுக்கரசு" என்ற அடைமொழியை, வர்ணனையின் முடிவில் அழகாகத் தலைக்கட்டியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

19. இந்த வரிசையிலுள்ள பத்தொன்பதாம் செய்யுளுக்கும் பதினெட்டாம் செய்யுளுக்கும் நடுவில் வேறு ஒரு சுலோகம் பல புஸ்தகங்களிலும் காணப்படுகின்றது. அதற்கு மல்லிநாதருரையும் கிடைக்கின்றது. ஆயினும், அந்தச் சுலோகத்தின் ரீதியைப் பார்த்தால் இதுபிறகு வந்தேறியாயிருக்கலாமென்று தோன்றுகின்றது. காளிதாஸர் சிருங்கார ரஸத்தை இவ்விதப் பதங்களைக்கொண்டு இவ்வளவு வெளிப்படையாகக்காட்டியிருப்பாரென்பதும் நம்பமுடியவில்லை. அருணகிரிநாதரும் விவரணகாரனும் அந்தச்செய்யுளை எடுத்துக் கையாளவில்லை. நாககன்னியரை மைநாகன் மணம்புரிந்தானென்று தக்ஷிணாவர்த்தர் கூறுவர்,

முன்பு தக்ஷனுடைய பெண்ணாகப் பிறந்து பரமசிவனுக்கு மனைவியாகிய "ஸதி" என்பாள், தன் தகப்பனார் தனக்குச் செய்த அவமானம் பொறாது, யோகாக்கினியில் தேஹத்தை எரித்து இவ்வுலகை நீத்தாள். அவள் தான் மறுமுறையும் பிறக்கக் கருதி, இந்த மேனையைத் தாயாகக் கொள்ள இவளை வந்தடைந்தாள். (20)

ஊக்கமெனும் குணம், நன்கு செலுத்தப் படுவதால் கேடடையாத நீதியினிடம் சம்பத்தைப் பிறப்பிக்கின்றாற்போல, மலைகளுக்கு மன்னவனான இமவான், தவம் நிறைந்த (யோகப்பயிற்சியுள்ள) அந்த மேனையினிடம் ஸகல மங்களங்களும் பொருந்திய அந்த ஸதியைத் தன்பெண்ணாகப் பிறப்பித்தான்.

இவள் பிறந்த நாளில், திசைகள் தெளிந்து விளங்கின. புழுதி கலவாது காற்று வீசிற்று. தேவர்கள் சங்கு முழக்கிய பின் மலர்மாரி பொழிந்தார்கள். சராசரங்களான எல்லாப்பிராணிகளும் இன்புற்றன. (22)

புதிய காரொலி கேட்டவுடன் கிளம்பும் இரத்தினக் கம்பியால் விதூரமென்ற மலையின் பூமி விளங்குவதுபோல, அந்தத் தாய், பேரொளி பரப்பும் அந்தப் பெண்குழந்தையால் பெரிதும் விளங்கினாள். (23)

---

21. வடமொழியில் பால் (லிங்கம்) என்பது பொருளைப் பற்றி நிற்பதன்று; சொல்லைப் பற்றியே நிற்கின்றது. ஆதலின் வடமொழிக் கவிகள் ஆண்பாலுள்ள சொல்லையும் பெண்பாலுள்ள சொல்லையும் சேர்த்து இவைகளின் பொருள்களை முறையே கணவனாகவும் மனைவியாகவும் கற்பனைசெய்து வேண்டியவாறு அலங்காரங்களைப் புகுத்துவார்கள். உதாஹரணமாக—இங்கு "உத்ஸாஹகுண" "நீதி" என்ற பதங்கள் முறையே ஆண்பாலும் பெண்பாலுமாகையால், இவைகளைத் தம்பதிகளாக நினைத்து அழகிய உவமையணி பூட்டப்பட்டிருக்கின்றது. இவ்வழக்கை எல்லாக் காவியங்களிலும் எங்கும் காணலாம்.

22. இங்கு முழக்கிய சங்குத் தொனியைக் கேட்டு தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர் என்றும் கூறுவர்.

23. "விதூரம்" என்ற மலை இரத்தினக் கனிகளுள்ளது. புதிதாக இடிமுழக்கம் கேட்டவுடன் அந்த மலைப்பிரதேசத்தில் பூமியினின்று இரத்தினங்கள் கம்பி கம்பிகளாய் முளைத்துக் கிளம்புகின்றன என்பது இரத்தின சாஸ்திரத்தின் கொள்கை. இந்த விதூரமலையிலுண்டாவதால்தான் ஒருவகைஇரத்தினம்வைடூ(டு)ரியமெனப்பெயர்பெற்றது.

சுக்கிலபக்ஷாரம்பத்தில் கிளம்பிய சந்திரகலைக்குத் தினந் தோறும் ஒவ்வொரு கலை வளர்ந்து அதற்குத் தக்கவாறு நிலாவும் பெருகிவருவதுபோல், பிறந்த இப்பெண்ணுக்கு நாடோறும் உறுப்புகள் வளர, அதற்கேற்ற வண்ணம் அழகும் பெருகி வந்தது. (24)

உற்றாரிடம் உறவு பாராட்டும் இந்தப் பெண்ணை இவளுடைய உறவினர், இவள் குலத்திற்கேற்பப் "பார்வதி" என்று பெயரிட்டழைத்தனர். அழகிய முகமுள்ள இப்பெண், ஒருகால் தவஞ்செய்யப் புறப்படுகையில் தாயாகிய மேனை, உ மா- குழந்தாய், வேண்டாமென்று சொல்லித் தடுத்துப் பார்த்தமையால், இவளுக்கு "உமை" என்ற பெயரும் பின்பு ஏற்பட்டது.

இமவானுக்கு வேறு குழந்தைகளிருந்தபோதிலும் இவனுடைய கண் இந்தப் பெண் குழந்தையினிடமே "பார்த்தது போதும்" என்ற திருப்தியை அடையவில்லை. வஸந்த காலத்தில் எண்ணிறந்த பூக்களிருப்பினும், வண்டினம் மாம்பூவிலன்றோ விசேஷமாகப் பற்றுதலுடையது. (26)

ஒளி மிகுந்த சுடர், விளக்கினைப் புனிதமாக்கி அதற்குத் தான் அணிகலமாவது போலவும், கங்கை, ஆகாச வீதியைச்

24. பார்வதியின் வளர்ச்சியைக் கூறுமிடத்து (பரமசிவனார் சிரமேற்கொண்ட) சந்திரகலையை உபமானமாகக் கூறியிருப்பதால், இவளும் சந்திரகலையைப்போலப் பரமசிவனால் பெரிதும் பாராட்டப்படுவாள் என்பது தொனிக்கின்றது. வடமொழியில் "லாவண்யம் நிறைந்த அவயவங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸௌந்தர்யம், ரூபம், லாவண்யம் ஆகிய மூன்றுக்கும் வெவ்வேறான லக்ஷணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. உறுப்புகளின் பொருத்தமான அமைப்பு ஸௌந்தர்யம், அங்கங்களில் ஆபரணங்கள் இல்லாதிருந்தும் ஆபரணங்கள் பூட்டியிருப்பனபோலத் தோற்றுவிக்கும் நிலை ரூபம், எல்லா உறுப்புகளிலிருந்தும் வீசும் ஒளி லாவண்யம் என்பது அந்த லக்ஷணங்களுடைய ஸாராம்சம். "நன் முத்துக்களிலிருந்து பாவுமொளியைப் போல அங்கங்களிலிருந்து வீசுமொளி லாவண்யமெனப்படும்" என்று லாவண்யலக்ஷணம் கூறுவர்.

25. உ—குழந்தாய், மா—(தவம்) வேண்டாம். உ—தவம், மா—வேண்டாம். என்றும் சொல்லுவர்.

சுத்திசெய்து அதனை அலங்கரிப்பது போலவும், இலக்கணம் வழுவாத சொல், கற்றோனைத் தூயவனாக்கி அவனுக்கு ஆபரணமாவது போலவும், இப்பெண் இமவானைப் பரிசுத்தப்படுத்தி அவனுக்கு ஓர் அலங்காரமாக இருந்தாள். (27)

இந்தப் பார்வதி இளம் பிராயத்தில் களித்து இன்பமுறுபவள் போலத் தோழிமாருடன் கூடி கங்கையில் மணல் மேடைகளைக் கட்டியும் பந்தடித்தும் பாவைகளைச் சீராட்டியும் இவ்வாறாக விளையாடி விளங்கினாள். (28)

சரத்காலத்தில் அன்னங்கள் கங்கையை வந்தடைவன போலவும், இரவில் சோதிக்கொடிகளை அவைகளின் ஒளிகள் வந்தடைவனபோலவும், இந்தப் பார்வதி கல்வி கற்கத்தொடங்குகையில், இவளால் முற்பிறவியில் ஊக்கத்துடனும் உறுதியுடனும் படிக்கப்பெற்று இவளுடைய மனத்தில் வாஸனை யுருவங்கொண்டு தங்கியிருந்த வித்தைகள் இவளை வந்தடைந்தன. (29)

---

27. மூன்று உவமைகளாலும் முறையே பார்வதியின் ஒளியும், தூய்மையும், சொல்லழகும் தொனிக்கின்றன. "ஸஞ்சாரிணீ தீபசிகேவ பாலா" என்று ரகுவம்சத்திலும், "கங்கா ரோத:பதநகலுஷா க்ருஹ்ணதீவ ப்ரஸாதம்" என்று விக்கிரமோர்வசீயத்திலும் இவ்வுவமைகள் கூறப்பட்டிருக்கின்றன. இடையனை யொப்ப "கோற்கையுங் கொடுமடியுடையும் விளித்த விழியும் வெண்பல்லுமாகி" அறிவிலியாய்த் திரிந்த தம்மைக் கனிவு பெருத்துப் பரிவுடன் பார்த்து, விளக்குச் சுடரைப்போலத் தமது இருளை நீக்கிக், கங்கையைப் போலத் தூயவராக்கி வழுவிலாச் சொற்களில் வன்மையுறச் செய்த காளிதேவியை இங்குக் காளிதாஸர் பக்தி பூண்டு பணிகின்றனர் போலும்.

28. எல்லாம் நிறைந்து எப்பொழுதும் திருப்தியுடனிருக்கும் தேவிக்கு விளையாட்டால் ஓரின்பம் வரவேண்டுவதில்லை என்பதைக் கருதி "இன்பமுறுபவள் போல" என்றார். "விளையாட்டிலுள்ள பிரீதியால் பாலப்பருவத்தை அனுபவிப்பவள் போல" என்பது அருணாசலருடைய பாடப்படி கருத்தாம்.

29. "கல்விப் பயிற்சி செயற்கையாலும் இயற்கையாலும் உண்டாகும்" எனப் பண்டைநூல் கூறும். இவ்விரு பயிற்சிகளும் இவளுக்கேற்பட்டன என்பதை முறையே உவமைகளிரண்டும் காட்டும். இதற்காகவே "ஆத்மபாஸ:" என்று மூலகர்த்தா கூறியிருக்கின்றார். இங்கும் "சோதிக்கொடிகளை அவைகளின் ஒளிகள்" என்று கூறப்பட்டது.

MADRAS


பிறகு இந்தப் பார்வதி பாலப்பருவம் நீங்கி யௌவனப் பருவமடைந்தாள். இம் மங்கைப்பருவம், அவளது அழகிய தேஹத்திற்கு அணியா அணிகலனாகவும், மதுவல்லா மதந்தரும் வஸ்துவாகவும், காமனுக்குப் பூவல்லாக் கணையாகவும் விளங்கிற்று. (30)

இவளுக்கு மங்கைப்பருவம் தொடங்கி ஒவ்வொரு உறுப்புக்களும் பிரிந்து வளர்ந்து அழகுற, சித்திரக்கோல் புதுக்கிய சித்திரம்போலவும், ஸூரிய கிரணங்கள் மலர்த்திய தாமரைப் பூப்போலவும் இவளுடைய மேனி மிளிர்ந்தது. (31)

பூமியில் ஊன்றுவதால் அதைப்பொறுது வருந்தித் தம்முள்ளிருந்து செம் பஞ்சுக் குழம்பைச் சக்குகின்றனவோ என்று தோன்றுமாறு, சிறிதுயர்ந்த பெருவிரல்களின் நகங்களது ஒளியைப் பரப்பும் இவளுடைய அடிகள், ஓரிடத்தில் நிலைபெறாத நிலத்தாமரைப் பூக்களை ஒத்திருந்தன. (32)

சிறிது சரிந்த அவயவமுடைய இவள் உல்லாஸமாக அடிவைத்து நடப்பதைப் பார்த்தால், இவளுடைய காற்சிலம்பின் ஒலியைக் கைம்மாறாகக் கற்கக் கருதி, அன்னங்கள் இவ்வழகிய நடையை இவளுக்குக் கற்பித்தனவோ என்றே எவனும் எண்ணுவான். (33)

---

30. முக்கண்ணனார் பார்வதியின் அப்பருவத்தைக் கண்ணால் கண்டு மனத்தால் சிந்தித்து மன்மதவசமாகுவது இங்குத் தொனிக்கின்றது. நாற்பதாம் சுலோகமும் இக்கருத்தைத் தாங்கிநிற்கும்.

31. இயற்கையாயுள்ள சோபை இப்பொழுது வெளிப்பட்டமையை உவமைகள் காட்டுகின்றன. சித்திரம் எழுதுபவன் அவ்வுருவம் நன்கு அமையும் வரை மாற்றி மாற்றி எழுதி நன்றாக்குவான். பார்வதியின் உருவமோ இயற்கையிலேயே அவ்வாறு அமைந்திருக்கின்றதென்பதை முதலுவமை காட்டக்கூடும். இக் கருத்தைக் காளிதாஸருடைய கிரந்தங்களில் பலவிடத்தும் காணலாம்.

32. "ராகம்" என்ற வடமொழிச் சொல்லுக்கு "செவப்பு" என்ற அர்த்தத்தைமட்டும் மல்லிநாதர் எழுதுகிறார்.

33. "ஸந்நதாங்கீ" என்று பாடாந்தரம் உண்டு. சரிந்த தோளையுடைய என்பது அதன்பொருள்.

இவளுடைய முழந்தாள்கள் உருண்டு திரண்டு ஏற்றபடி சரிந்து அதிகம் நீளாமல் சுபலக்ஷணங்கள் பொருந்தி விளங்கின. இவைகளின் சிறந்த அழகை உற்றுப் பார்ப்பவர்களுக்குப் பிரமதேவர் தாம் சேமித்து வைத்திருந்த அணிப்பொருள் முழுவதையும் இவைகளுக்காகவே செலவாக்கி விட்டபடியால் பார்வதியின் மற்றை அவயவங்களுக்கு அழகு கொடுக்கப் புதிதாக அழகுப்பொருளைத் தேடப் பெரிதும் பிரயத்தினம் செய்திருக்கவேண்டுமென்ற எண்ணமே உண்டாகும். (34)

யானைகளுடைய துதிக்கைகள் கரடு முரடான தோல்களை உடையன. சிறந்த வாழைகளோ எப்பொழுதும் குளிர்ச்சி பொருந்தியன. ஆதலால் இவைகளிரண்டும், உலகில் பருத்த உருவமமையப் பெற்றும் பார்வதியின் தொடைகளுக்கு உபமானங்களாகாமல் புறம்பாயின. (35)

மாசற்ற இவளுடைய அரை ஞாண் சார்த்து மிடத்தின் (நிதம்பம்) அழகைப், பரமசிவனைப் பிறமாதர் விரும்பவும் ஒண்ணாத தமதுமடியில் பின்பொருகால் இருத்தி வைத்துக் கொண்டதிலிருந்தே ஊஹித்தறியலாம். (36)

பார்வதியின் அரையில் புதிதாகத் தோன்றியுள்ள நுண்ணிய உரோம வரிசை மேற்சென்று இவளுடைய அழகுள்ள உந்தியில் புகுந்து விளங்குவது, இவளது அரை ஞாண்மத்தியிற் பதித்த இந்திரநீல ரத்தினத்தின் ஒளி பட்டாடையின்முடியைக் கடந்து மேற்பரவி வருகிறதோ என்று ஐயுறுமாறிருந்தது. (37)

யாகவேதியை யொப்பச் சிறுத்த இடையையுடைய பார்வதியின் அரையில் சீருடன் தோன்றின மூன்று மடிப்புக்கள்,

---

35. ஸ்திரீகளின் தொடையும் ஸ்தனமும் வேனிற்காலத்தில் குளிர்ந்தனவாகவும், குளிர்காலத்தில் சூடுள்ளனவாகவும் வர்ணிக்கப்படுகின்றன.

37. உந்தியில் புகுந்தென்பது உந்திவரை வளர்ந்து வந்திருப்பதைக் குறிக்கின்றது.

38. யாகவேதிகை அடியும் நுனியும் அகன்றும் இடை சிறுத்துமிருக்கும். மல்லிநாதர் பாடப்படி "மன்மதன் ஏறுவதற்காகப் புது யௌவனம் கட்டிய" என்று கொள்ளல்வேண்டும்.

புது யௌவனம் வந்தேறுவதற்காகக் காமன்கட்டிய படிக்கட்டுகள்போல விளங்கின. (38)

கருங்குவளையைப் போன்ற கண்ணுடைய பார்வதியின் இரு ஸ்தனங்களும் வெளுத்து முகம் கறுத்து ஒன்றையொன்று இடித்துக் கொண்டு வளர்ந்துவந்தன. இவைகளின் நடுவில் தாமரை நூல் நுழையவும் இடம் அகப்படவில்லை. (39)

மீனக்கொடியோன் (மன்மதன்) முன்னர் தோல்வியடைந்தும் பின்னர் இந்தப்பார்வதியின் கைகளையே பரமசிவனை வெல்ல அவருடைய கழுத்தில் சுருக்குக் கயிறுகளாக உபயோகித்ததை நினைத்தால், இவளுடைய இவ்விருகைகளும் வாகைப் பூமாலையினும் மெல்லியன என்று நான் எண்ணுகின்றேன். (40)

பார்வதி, சிறிது சிறுத்து அழகாயுள்ள தனது கழுத்தில் உருண்டு திரண்ட நன்முத்துக்களாலாகிய மாலையொன்றை

39. கூடப்பிறந்தோர் இருவர் தம்முள் பிணங்கி முகம் கறுத்து உடம்பு வெளுத்து ஒருவரை ஒருவர் வருத்தும்பொழுதும், அவரிடையில் வேறொருவன் நுழையச் சிறிதும் இடமில்லாவிடின், அவருடைய அழுக்காறுங் கொள்கை மோதுதல் அபிவிருத்தியையே பயக்கும் என்ற பொருளொன்று தோன்றுவதால் ஸமாஸோக்தி என்னும் அலங்காரம் இங்குண்டு.

40. உலகத்தில் மெல்லியதெனப்படும் பதார்த்தத்தை மன்மதன் கைக்கொள்ளின், அது மிகக் கடினவஸ்துவாகின்றது. இதற்குப் பூவே தக்க சான்றும்" என்ற கருத்தைக் காளிதாஸர் மாளவிகாக்னிமித்திரீயத்தில் வெளியிட்டிருக்கின்றார். பூக்கள் மெல்லியன. அவைகளிலும் சென்மேனிவாகைமலர் பெரிதும் மென்மையுள்ளது. இவைகளால் வெல்லமுடியாத சிவபிரானைப் பார்வதியின் கைகளைக்கொண்டே காமன் வென்றுவிட்டபடியால், முற்கூறியபடி மிகக் கடினவஸ்து செய்யவேண்டிய காரியத்தைச் செய்த இக்கைகள் மிக மிக மெல்லியனவாயிருக்கவேண்டுமென்பது கருத்து. காளிதாஸர் இந்தச் சுலோகத்தில் மன்மதனை "மகரத்த்வஜன்" என்று கூறி, தோற்றுப்போன அவன் ஜயித்துவிட்டபடியால் அவனுடைய கொடியை அன்புடன் உயர்த்தினார்போலும்.

41. மல்லிநாதர் "ஸ்தநபந்துரஸ்ய" என்ற பாடத்தை அங்கீகரித்து, "ஸ்தநங்களால் பந்துர (உயர்ந்த) மான" என்று பொருள்கூறி,

அணிந்திருந்தாள். அந்த மாலை கழுத்தையும், அந்தக்கழுத்து மாலையையும் சிறப்பித்துக்காட்டுவதால், அணி, அணியப்பெற்றது என்னும்தன்மைகள் இவ்விரண்டுக்கும் பொதுவாயிருந்தன.

திருமகள் இரவில் சந்திரனிடம் செல்லுகையால் அப்பொழுது பதுமத்தின் பண்புகளை அனுபவிக்க அவளுக்கு இயலவில்லை. பகலில் பதுமத்தைப் பற்றுகையில் அவளுக்குச் சந்திரனது சீர்மை அனுபவிக்கக் கிடைப்பதில்லை. இவ்விரண்டனையும் ஒருசேர அனுபவிக்க விருப்பமுள்ளவளாய்ப் பலவிடத்தும் அலைந்துதிரிந்த அன்னவள், இந்தப் பார்வதியினுடைய முகத்தை வந்தடைந்து அவ்விரண்டினாலுமுண்டாகும் உவகையைப் பெற்றாள். (42)

வெண்மலர், செந்தளிருடன் சேர்ந்தும், நன்முத்து, ஒளிரும் பவளத்தின்மீதமர்ந்தும் கிடைப்பின், அவைகள், பார்வதியின் செவந்த இதழில் பரவும் வெளுத்த புன்னகையோடு உவமையைப் பெறும். (43)

பார்வதி, அமுதுபெருகும் தனது இனிய குரலால் சொல்லழகுபொருந்தப் பேசத்தொடங்குங்கால், பெண்குயிலின் தொனிகூட முறை தவறித் தெறித்த தந்திக் கம்பியின் ஒலியையொப்பக் கேட்போருக்கு வெறுப்பைத் தருவதாக இருந்தது. (44)

---

இதனைக் கழுத்திற்கு அடைமொழியாக்கியிருக்கின்றார். இதன் பொருத்தம் நமக்கு விளங்கவில்லை. பந்தாபதத்திற்கு அழகெனப் பொருள் கொண்டாலும் அடைமொழிப்பொருத்தம் ஏற்படவில்லை. விக்கிரமோர்வசீயத்தில் ஊர்வசியின் உருவத்தை "அணிகலனுக்கணிகலன்" என்று காளிதாஸர் வர்ணிக்கின்றார்.

42. சந்திரனைப்போலவும் தாமரையைப்போலவும் பார்வதியின் முகம் விளங்கிற்றென்பது கருத்து. இதன் சாயையை "ஸாஸிஜம்" என்ற சாகுந்தளச் செய்யுளிலும் காண்க.

43. இவ்வாறு கிடைப்பதரிதாகையால், பார்வதியின் அவ்வாறுள்ள புன்னகை நிகரற்றது என்பது கருத்து.

அகன்ற கண்களையுடைய இந்தப் பார்வதியின் மருண்ட பார்வை. நல்ல காற்றில் அசைந்து விளங்கும் கருங்குவளையை ஒத்திருந்தது. அப்பார்வையைப் பெண் மான்களிடமிருந்து அவள் கற்றனளா? அல்லது பெண்மான்கள் அவளிடமிருந்து கற்றனவா? (45)

பார்வதியினுடைய வளைந்த புருவங்களின் காந்தி, சலாகையினால் மை தீட்டி யுண்டாக்கியது போலிருந்தது. விலாஸத்துடன் விளங்கும் இச் சோபையைக் கண்ணுற்றதும் காமன் தனது வில்லழகுச் செருக்கை விடுத்தான். (46)

விலங்குகளுக்கு மனத்தில் நாணமென்பது இருப்பின், சமரிமான்கள் பார்வதியின் அழகிய கற்றைக்குழலைக் கண்டதும் நிச்சயமாய்த் தமது வாலில் வைத்திருக்கும் பிரீதியைக் குறைக்காமலிரா. (47)

உலகத்தை உண்டாக்கிய பிரமதேவர், ஓரே இடத்தில் அழகுகளையெல்லாம் காணக் கருதி உவமைப் பொருளனைத்தையும் ஒருங்கு சேர்த்து அவைகளை உரிய இடங்களில் வைத்துப் பெரிதும் முயன்று பார்வதியைப் படைத்தனர்போலும். (48)

---

45. சாகுந்தலத்தில், சகுந்தலையிடமிருந்து மான்கள் மருண்ட பார்வையைக் கற்றன என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

46. மல்லிநாதருடைய பாடப்படி "நீண்ட புருவங்கள்" என்று மொழிபெயர்க்கவேண்டும்.

48. உலகத்தைஉண்டாக்கிய என்பதால் பிரமதேவருடைய கைப்பழக்கமும், இதுவரை இவ்வாறு படைக்காததில் அவருக்குள்ள மனவருத்தமும், இப்புதிய ஸிருஷ்டியிலுள்ள குதூகலமும் வெளிப்படுத்தப்படுகின்றன. உவமைப்பொருள்களாவன —சந்திரன் தாமரைப்பூ மேகம் சங்கு முதலியன. இவைகளே சாகுந்தலத்தில் "ரூபோச்சயேந" என்ற பொதுச்சொல்லால் கூறப்பட்டன. உவமைப்பொருள்களுள் சிலவற்றைக் கூறி பவபூதி மாலதீமாதவத்தில் இவ்வாறுள்ள வர்ணனையைச் செய்திருக்கின்றான். காளிதாஸர் பாலப் பருவம் நீங்கிய தேவியை வர்ணிக்கக்கருதி, முப்பத்தொன்றாம் செய்யுளால் தேவியினுருவத்தைப் பொதுவிலும் பின்னர் பதினாறு சுலோகங்களால் அடிமுதல் முடிவரை குறிப்பாகவும் வர்ணித்துவிட்டு, நாற்பத்தெட்டாம் செய்யு

தம்மிச்சைப்படி எங்கும் சுற்றி நடக்கும் நாரதமுனிவர் ஒருகால் இமவானிடம் வந்து, அவனருகிலிருந்த கன்னிகையான பார்வதியைப் பார்த்து "இவள் பரமசிவனுருக்கு அவரது பாதிச் சரீரத்தை அன்பினால் பங்கு கொள்ளும் ஒரே மனைவியாகப் போகின்றாள்." என்று இமவானுக்கு உறுதிமொழி கூறினார். (49)

ஆதலின், தகப்பனான இமவான் இப் பார்வதிக்கு விவாகத்திற்கேற்ற பிராயம் வந்திருப்பினும், இவளுக்கு நாயகனாக வேறொரு வரனையும் தேட விரும்பாதிருந்தான். மந்திரத்தால் தூயதான ஹவிஸினைப் பெற அக்கினியைத் தவிர பிற தேஜஸுகளுக்கு உரிமை உண்டோ?. (50)

இமவான், வானவர்க்கும் வானவனாகிய சிவபெருமான் முதலில் தன்னைக் கேட்காதிருக்கும்போது தானாகவே தனது பெண்ணை அவருக்குக் கொடுக்கத் துணியவில்லை. தனது நிலையைக் காப்பாற்றக் கருதுபவன், தனது வேண்டுகோள் ஒருகால் மறுக்கப்படுமோ என்றஞ்சி, விருப்பமுள்ள விஷயத்திலும் தான் நடுநிலைமையையே கைக்கொள்வான். (51)

பல்லழகு பொருந்திய இப் பார்வதி முற்பிறவியில் ஸதியாயிருந்து தக்ஷனிடத்துக் கோபத்தால் தனது சரீரத்தை

---

ளால் ஆரம்பத்தில் செய்த வண்ணமே அவ்வுருவத்தைப் பொதுவில் வர்ணித்து இவ்வர்ணனையை முடிக்கின்றார். இமவானுடைய வர்ணனையிலும் "குன்றங்களுக்கரசு" என்பதை ஆரம்பத்திலும் அவஸானத்திலும் கூறித் தலைக்கட்டினார். இங்கும் பொதுவான வர்ணனையையே தொடக்கத்திலும் முடிவிலும் ஆதரிக்கின்றார். இருவிடங்களிலும் வர்ணனைச் செய்யுட்கள் பதினாறே. இவ்வாறு செய்ததிலுள்ள ரகஸியம் யாதோ? தகப்பனாரை யொத்த பெண் பாக்கியவதியாவாள் என்ற நூன்முறையை இங்கு நாம் அறியவேண்டுமென்று கருதுகின்றாரோ.?

49. மூலத்தில் "கன்யாம் கில" என்றிருக்கின்றது. "கில" என்ற சொல் பொய்யைக் காட்டும். நித்ய யுவதியாய்ப் பிறப்பில்லாத் தேவிக்குக் கன்னிப்பருவமென்பதும் பிறவியென்பதும் வெறும் நடிப்பே என்பது கருத்து. இங்கும் "கன்னிகை ஆன" எனக் கொள்ளுக.

51. "ஸாது:" என்ற பாடத்தில் நல்லோன் என்பது பொருள்.

அக்கினியிலிட்டெரித்த நாள் முதற்கொண்டே, பரமசிவனுர் எல்லாவற்றிலும் பற்றுவிட்டு வேறு மங்கையை மணக்காமலி ருந்துவிட்டார். (52)

பின்னர், அப்பரமசிவனுர் தவஞ்செய்யக் கருதி யானைத் தோலை உடுத்து மனத்தை அடக்கி இந்த இமயமலைக்கு வந்து, கங்கைப் புனல் ஓடி நனைக்க தேவதாருமரங்களுள்ளதும் கஸ் தூரியின் நறுமணம் வீசப்பெற்றதும் கின்னரர்கள் யாழினிசை யை யொத்துப் பாடுமிடமுமாகிய தாழ்வரை யொன்றில் வஸித்தார். (53)

பரமசிவனுருடைய கணங்கள், நமேருமரங்களின் பூக்க ளைப் பறித்துத் தலைகளில் சூடியும் மெல்லிய பூர்ஜமரவுரிகளை உடுத்தும் மனேசிலைகளைக் குழைத்து தேகத்தில் பூசியும், அங்குச் சிலாஜத்துக்களால் பொருந்தச்சேர்ந்த கற்பாறைகளில் உட்கார்ந்திருந்தன. (54)

திமிர்த்து விளங்கும் பரமசிவனுருடைய காளை, அங்குச் சிங் கங்களின் கர்ஜனையைப் பொறுமல், தனது குளம்பு நுனிகளால் பனிக்கட்டிகளைக் கீறிக்கொண்டு, அங்குள்ள கவயமிருகங்கள் மிகப் பயந்து தன்னை நோக்க, முக்காரம் போட்டது. (55)

எட்டு மூர்த்திகளுள்ள பரமசிவனுர், தாம் பிறர் செய்யும் தவங்களுக்குப் பயன்களை அளிப்பவராயிருந்தும், ஏதோ ஒரு விருப்பம் கொண்டு அந்த இமயமலையில் தம்மூர்த்திகளுள் ஒன் ருகிய அக்கினியைச் சமிதையிட்டு வளர்த்துத் தவஞ்செய் வாராயினர். (56)

வானோர் யாவரும் பணிந்து வழிபடும் பெருமை பொ ருந்திய அச்சிவபிரானை இமவான் பூஜித்துவிட்டு, மனத்தூய் மை மிகுந்த தனது பெண்ணை அவளுடைய தோழிகளுடன் அப்பெருமானுக்குப் பணிவிடை செய்யுமாறு அங்குச்செல்லக் கட்டளையிட்டான். (57)

54. சிலாஜத்தென்பது ஒருவித அரக்கு; அதனால் அது உருகிப் பாறைகள் ஒன்ரோடொன்று சேர்ந்துகொள்கின்றன.

பரமசிவனார், இப் பார்வதி தமது மனவொருப்பாட்டுக்கு ஒரு கால் இடையூறாகக் கூடியவளாகவிருந்தும் தமக்குப் பணிவிடை செய்ய உடன்பட்டார். மனம் கலக்கமுறக் காரணங்களிருப்பினும் எவர்களுடைய மனம் கலங்குவதில்லையோ, அவர்களே தீர புருஷர்களாவார். (58)

கூந்தலழகியான பார்வதி, தினந்தோறும், பூசனைக்குரிய பூக்களைப் பறித்து வந்தும் பரமசிவனிருக்கும் மேடையைக் கழுவித் துலக்கியும் ஆசமனம் முதலியன செய்வதற்கு வேண்டிய ஜலத்தையும் தருப்பைகளையும் கொணர்ந்து கொடுத்தும் இவ்வாறு அப்பெருமானை, அவரது தலையிலுள்ள வெண்மதியின் நிலாவினால் தனது சிரமம் நீங்கியவளாகி உபசரித்தாள்.

---

முதல் ஸர்க்கம் முற்றிற்று.

---

## இரண்டாம் ஸர்க்கம்

அக்காலத்தில் தேவர்கள் தாரகாஸுரனால் துன்புறுத்தப்பட்டவர்களாய், இந்திரனை முன்னிட்டுக்கொண்டு பிரமதேவரிருப்பிடம் சென்றனர். (1)

பூக்கள் குவிந்த தாமரைப் பொய்கைகளினெதிரில் வெயிலோன் விடியற்காலையில் வெளிப்படுவதுபோல, வாடிய முகங்களுடன் வந்து நிற்கும் அவர்களுடைய முன்னிலையில் பிரமதேவர் வெளிப்பட்டார். (2)

---

1. காவ்யநாயகனுடைய தாய்தந்தையர்களைப்பற்றி முதல் ஸர்க்கத்தில் சுருக்கமாகப் பேசப்பட்டது. இனி பிரதிநாயகனுடைய வலிமையையும், நாயகனது அவதாரத்திற்குள்ள காரணத்தையும் இந்த ஸர்க்கத்தில் பேசுகிறார்.

பின்னர், தேவர்கள்யாவரும் உலகமனைத்தையும் படைத்தவரும் கலைமகளின் கணவருமாகிய அந்த நான்முகரை நமஸ்கரித்து உண்மையான ஸ்தோத்திரங்களைச்செய்து வழிபடுவாராயினர். (3)

சிருஷ்டிக்கு முன்பு உருவமில்லாமல் ஒருவராயிருந்து, பின்பு முக்குணப்பாகுபாடுபெற்றி வேற்றுமையை ஏற்றிருக்கும் தேவரீருக்கு நமஸ்காரம். (4)

பிறப்பில்லாதவரே, தேவரீர், பழுதாகாத எந்த விதையை நீருள் விதைத்தீரோ, அந்த விதையின் விளைவுதான், ஸ்தாவரமாயும் ஜங்கமமாயுமுள்ள இவ்வுலகென்று கூறப்படுகின்றது.

தேவரீரொருவரே, தமது பெருமை வெளிப்பட ருத்திரன், விஷ்ணு, பிரமன் என்ற மூன்று நிலைமைகளையும் அடை

3. "வாகீசம்" என்ற பதத்திற்கு மல்லிநாதர் "வித்தைகளுக்கு ஈசன் என்று பொருள் எழுதுகிறார்.

4. இதுமுதல் பிரமஸ்துதி. இங்குப் பல்வேறு கொள்கைகள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒன்றிலும் நம் கவிக்கு வெறுப்புக் கிடையாது. ஆயினும் இவருடைய நோக்கம் எந்த ஸித்தாந்தத்திலென்பதை முகவுரையில் காரணங்களுடன் காட்டுவோம். ஸத்துவகுணத்தையும் காக்குந் தொழிலையும் கைக்கொண்டு விஷ்ணுவாகவும், ரஜோகுணத்தையும் படைக்குந்தொழிலையும் ஏற்றுப் பிரமனாகவும், தமோகுணத்தையும் அழிக்குந் தொழிலையும் அங்கீகரித்து ருத்திரனாகவும் வெளிப்படுவதாக பிரமாணகிரந்தங்கள் கூறுகின்றன. "நமோஸ்த்வமூர்த்தயே" என்பது நாதர் பாடம். "நமஸ்த்ரிமூர்த்தயே" என்பது மல்லிநாதர் பாடம். இந்தப் பாடத்தில் "த்ரிமூர்த்தயே" என்பதைச் செய்யுளின் இறுதியில் சேர்க்கவேண்டும்.

5. மனுஸ்மிருதியிலும் இவ்வாறே சொல்லப்பட்டிருக்கிறது. மல்லிநாதர் பாடப்படி "இந்த விதையிலிருந்துதான் சராசரமான உலகு உண்டாயிற்று. ஆகையால் அந்த உலகத்திற்கு தேவரீர்தாம் காரணமாகக் கூறப்படுகின்றீர்" என்று கொள்ளல்வேண்டும். இந்தப் பாடம் அவ்வளவு சிறந்ததன்று.

6. நான்காம் செய்யுளின் கருத்தையே இச்செய்யுள் வேறுசொற்களால் விரித்துரைக்கின்றது. "படைத்தலை முதலில் சொல்லாமல்

ந்து, அழித்தல், காத்தல், படைத்தல் என்ற முத்தொழில்களுக்கும் காரணமாக இருக்கின்றீர். (6)

தேவரீர் உலகத்தைப் படைக்கக் கருதி, ஆண் பெண் என இரு கூறாகப் பிரிந்தீர். அந்த ஆணும் பெண்ணுமே பிறவிகொண்டு பெருகிவரும் இந்தப்பிரபஞ்சத்திற்குத் 'தந்தையும் தாயுமாவார்' எனக் கருதப்படுகின்றனர். (7)

தேவரீர், தமது கால அளவுப்படி இராப் பகல்களைப் பிரித்துக்கொண்டு, முறையே தூக்கத்தையும் விழிப்பையும் கைக்கொள்கின்றீர்; அவைகள் தாம், பிராணிகளுடைய அழிதலும் தோன்றலுமாகின்றன. (8)

தேவரீர் உலகத்திற்குக் காரணப்பொருள்; தேவரீருக்குக் காரணப்பொருள் கிடையாது. தேவரீர் உலகத்தை அழிப்பவர்; தேவரீரை அழிப்பாரில்லை. தேவரீர் உலகத்திற்கு முதல்வர்; தேவரீருக்கு முதல்வனில்லை. தேவரீர் உலகத்திற்கு ஆண்டவர்; தேவரீருக்கு ஆண்டவனில்லை. (9)

---

முடிவில் சொன்னது முறைத் தவறன்றோ வெனின், அன்று; முன் சுலோகத்தில் படைத்தலைப் பற்றிச் சொல்லிவிட்டமையால் இங்கு முக்கியமாய்ச் சொல்லவேண்டிய மற்ற இருதொழில்களையும் முன்பாகச் சொன்னார்" என்று விவரணகாரர் எழுதுகின்றார், அவ்விரு தொழில்களுள் அழித்தலை முன் வைக்கக் காரணம் என்ன? என்ற வினா மீண்டும் எழுகின்றது. ஒரு சேனாபதியைப் படைத்துத் தாரகனை அழித்துத் தங்களைக் காப்பாற்ற வேண்டுமென்பது தேவர்களின் பிரார்த்தனை. ஆதலின் அதற்குத் தக்கவாறு முன் சுலோகத்தில் படைத்தலையும், இங்கு முதலில் அழித்தலையும் பின்பு காத்தலையும் கூறியிருக்கின்றார். நிலைமைகள் மூன்றெனக் கூறப்பட்டிருப்பதால் அவைகளுக்கேற்றபடி மூன்று தொழில்களையும் சொல்லவேண்டி வந்தமையால் படைத்தலும் இங்குச் சேர்த்துச்சொல்லப்பட்டது எனக் கொள்வது தகும். இச் செய்யுளின் கருத்தை மனுஸ்ம்ருதியிலும் காண்க.

8. ஆயிரம் சதுர்யுகம் பிரமனுக்கு ஒரு தினமாம். இங்குக் கூறப்பட்ட பிரளயம் இடையில் நிகழ்வது; மஹாப்பிரளயமல்ல. மஹாப் பிரளயம் பிரமனுடைய நூறு வருஷத்திற்குப் பிறகேயாமென மல்லிநாதர் எழுதுகிறார். இரு பரார்த்த காலம் பிரமனுடைய காலமென அருணகிரிநாதர் எழுதுகிறார். பரார்த்தம் என்பது இறுதி எண்.

எல்லா வல்லமைகளுமுள்ள தேவரீர், தம்மைத் தாமே அறிகின்றீர்; தம்மைத் தாமே படைக்கின்றீர்; தம்மில் தாமே மறைகின்றீர். (10)

தேவரீர், நெகிழ்ந்ததும் இறுகிக்கடினமானதும், பருத்ததும் நுண்ணியதும், வலியதும் மெலியதும், புலனுவதும் மறைந்திருப்பதுமானப் பல்வகைப்பொருள்களாயிருக்கின்றீர். தேவரீருடைய உடைமைப் பொருள்களின் விஷயத்தில் தேவரீரிச்சையே காரணமாம். (11)

எந்த வாக்குகளின் தொடக்கம் ஓங்காரமோ, எந்த வாக்குகளை உதாத்தம் அனுதாத்தம் ஸ்வரிதம் என்ற மூன்று

10. தம்மைத்தாமே அறிகின்றீர் — உலகத்திற்கு அருள்புரிய எண்ணிப்பிரமரூபமாக உண்டுபண்ண விரும்பப்படும் தம் ஸ்வரூபத்தை அறிகின்றீர் என மல்லிநாதரும், தாமே உண்டாவதற்குள்ள உபாயத்தை அறிகின்றீர் என அருணகிரிநாதரும் எழுதுகின்றனர். தம்மைத்தாமே படைக்கின்றீர்— தோற்றுவிக்கப்படும் உலகம் தோன்ற, அதிஷ்டானமும் (ஆதாரம்) தேவரீர் தாம் என மல்லிநாதர் கருத்துக் கூறுகின்றார். மூலத்திலுள்ள "ஆத்மாநம்" என்பதற்கு தேகமென விவரணகாரர் பொருள் உரைக்கின்றார்.

11 இந்தச்செய்யுள் அருணகிரிநாதராலும் விவரணகாரராலும் எடுக்கப்படவில்லை. "ஆறுகடல் முதலியன நெகிழ்வன, மலை முதலியன கடினமானவை, ஐம்பொறிகளால் அறியக்கூடிய குடம் முதலியன பருத்தன, புலனுகாத பரமாணுமுதலியன நுண்ணியன, அசையாத மஹாமேரு முதலின வலியன, பறக்கும் பஞ்சு முதலியன மெலியன. காரியமாயிருந்து புலனுகின்றீர். காரணமாயிருந்து மறைந்திருக்கின்றீர்" என்று மல்லிநாதர் கருத்தெழுதுகின்றார். இவ்வுரையின் பொருத்தம் தெள்ளிதின் விளங்கவில்லை. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் பிரமதேவரே என்றுகாட்ட எதிரிடையான பதார்த்தங்களைக் கூட்டிச் சொல்லியிருக்கின்றார். இவ்வாறு பல்வேறு பொருள்களாக நிற்பதில் மற்றவர்களுக்குள்ளதுபோலப் பிரமதேவருக்கு கர்மம் காரணமன்று; இச்சை தான் காரணமென்பது கருத்து.

12. "யஜ்ஞ:, பலம் ஸ்வர்க்க: (ச) யாஸாம் கர்ம" என்பது நாதரினுரை. இதையே நாம் தழுவினோம். "யாஸாம் கர்ம யஜ்ஞ:, யாஸாம் பலம் ஸ்வர்க்க:" என்பது மல்லிநாதருரை. இந்த வாக்குகளுக்கு ஸ-

ஸ்வரங்களால் சொல்லவேண்டுமோ, எந்த வாக்குகள் விதிக்கும் கர்மம் யாகமோ, எந்த வாக்குகளால் அந்த யாகத்திற்குப் பயனாக அறிவிக்கப்படும் பொருள் ஸுவர்க்கமோ, அந்த (வேத) வாக்குகளை வெளிப்படுத்தியவர் தேவரீர்தாம். (12)

தேவரீர் பித்ரு தேவதைகளுக்கும் பிதாவாகின்றீர்; தேவர்களுக்கும் தெய்வமாயிருக்கின்றீர்; மேம்பட்ட வஸ்துக்களெல்லாவற்றுக்கும் மேம்பட்டவராகின்றீர். படைப்போரையும் படைக்கின்றீர். (13)

அறிவுள்ளோர்கள், தேவரீரை, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப்பட்ட புருஷார்த்தங்களை அடைவத

---

வர்க்கம் பலமாவது கர்மவழியாக என்று அவரே கருத்தெழுதுகின்றார். மற்ற வாக்குகளைப்போலன்றி, தொடக்கத்திலும் ஒதுங்காலத்திலும் பொருளறியும் பொழுதும் இந்த வேதவாக்குகளுக்குள்ள சிறப்பு மூலத்தில் மூன்றடிகளாலும் காட்டப்பட்டது. இங்குப்ரம்மகாண்டம் ஏன் பேசபடவில்லை என்ற கேள்விக்கு ஸமாதானமாக மல்லிநாதர் கர்ம என்பது ப்ரம்மத்திற்கும், ஸ்வர்க்க என்பது மோக்ஷத்திற்கும் உபலக்ஷணம் (மற்றொன்றையும் தெரிவிப்பது) என்று எழுதுகிறார். தேவர்கள், பகைவனைக்கொன்று தாங்கள் ஸுகமாக வாழ நினைத்து வந்தவர்களாகையால், ப்ரவ்ருத்தி தர்மத்தைத் தெரிவிக்கும் கர்மகாண்டத்தைப் பற்றியே பேசினார்கள் எனக் கொள்ளலுமாம். பயனை விரும்பாது செய்யும் கருமமும் யாகமே என்பதும், ஸ்வர்க்கமென்ற சொல்லுக்கு உண்மைப் பொருள் மோக்ஷம் தானென்பதும் வேதாந்திகளின் துணிபு.

13. மல்லிநாதர் பாடப்படி இது பதினான்காம் செய்யுள். "பராதபி பர: ச அஸி—பிரபஞ்சத்தைக் கடந்த மாயாசபள(ஸவிசேஷ)னை புருஷனைவிட மேலான பரமாத்மாவாகின்றீர்" என்பது விவரணவுரை. "எல்லாவற்றிற்கும் மேலாயிருக்கின்றீர். இந்திரியங்களைவிடப் பொருள்களும், அவைகளைவிட மனமும், அதனை விடப் புத்தியும், அதனைவிட ஆத்மாவும், அதனைவிட மஹத்தும், அதனைவிட அவ்யக்தமும், அதனைவிட புருஷனும் மேலான வஸ்துக்கள் என்று உபநிடதம் கூறுகின்றது" என்பது மல்லிநாதருரை.

14. உலகத்திற்கு மூலகாரணம் ப்ரக்ருதியே. புருஷனென்பான் ஒன்றும் செய்யாமல் உதாஸீனனாய் அந்தப் ப்ரக்ருதியை ஸாக்ஷியாக நின்று பார்த்துக்கொண்டிருக்கின்றான். இந்தப் புருஷன் அடுத்திருப்

ற்காகச் செய்கைகளை நிகழ்த்தும் மூல ப்ரக்ருதி எனக் கொள்கின்றார்கள். செய்கையற்றவனாய் அந்த ப்ரக்ருதியைப் பார்த்துக்கொண்டிருக்கும் புருஷனும், தேவரீரே என நினைக்கின்றார்கள். (14

ஹோமஞ்செய்யப்படும் பொருளும், ஹோமஞ்செய்பவனும் நித்தியரான தேவரீர் தாம்; அனுபவிக்கப்படும் பொருளும் அனுபவிப்பவனும் தேவரீர் தாம்; அறியப்படும் பொருளும் அறிபவனும் தேவரீர் தாம்; தியானிப்பவனும் தியானிக்கப்படும் சிறந்த அப்பொருளும் தேவரீர் தாம். (15)

இவ்வாறு தேவர்கள் மனத்திற்கு இனிய மெய்யான துதிகளைச் செய்யக் கேட்டுப் பிரமதேவர், அவர்களுக்கு அருள் புரியக் கருதிப் பின்வருமாறு மறுமொழி கூறினார். (16)

பண்டைக் கவியாகிய பிரமதேவர் மறுமொழி கூறுகையில்

---

பதாலேயே ப்ரக்ருதி ஜடமாயிருப்பினும் செய்கைகளைச் செய்கின்றது. புருஷனுக்குக் கர்த்ருத்வம் கிடையாது. அது ப்ரக்ருதிக்கே உள்ளது. நாம் மாறாக நினைப்பது மயக்கத்தால். இவ்வாறு ப்ரக்ருதி புருஷர்களின் தன்மைகளைப் பகுத்தறியாமையால் ஸம்ஸாரமும், அவ்வாறு அறிவதால் மோக்ஷமும் ஏற்படுகின்றன என்பது ஸாங்கியர்களின் முக்கியக் கொள்கை. ஸாங்கியர்களுள் சிலர் பரமாத்மாவை ஒப்பவில்லை. அவர்கள் மதப்படி ஜீவாத்மாமட்டுமே புருஷன். ஈசுவரனை ஒப்புவார் புருஷனை முக்கியமாகப் பரமாத்மாவெனக் கொள்ளுவர். இவ்விரு கொள்கையுடையார்க்கும் சேருமாறு இச் செய்யுள் பொதுவிலமைந்திருக்கின்றது. இச் செய்யுளுக்கு வேதாந்த சாஸ்திரப்படியே பொருள்கூறும் வழியைப் பெரியாரிடமிருந்து கேட்டுணர்க. "புருஷார்த்த ப்ரவர்த்தனீம்" என்ற சொல்லுக்கு, "புருஷனுக்குப் போகங்களை உண்டாக்குகின்ற" என்று நாதர் பொருள் கூறுகின்றார்.

15. "போஜ்யம்" என்ற பாடப்படி "உண்ணப்படும் அன்னம்" என்று மல்லிநாதர் எழுதுகின்றார். "போக்யம்" என்பது நாதரின் பாடம். அதனையே நாம் தழுவினோம். மூலத்தில் முற்பகுதியால் கர்ம காண்ட விஷயமும், பிற்பகுதியால் ஞானகாண்டவிஷயமும் தெரிவிக்கப்பட்டன என்பது நாதரினுரை.

17. இதற்கு முன் எவராவது பேச வந்தால் அவர்களுக்கு எதிரில் பிரமதேவர் பேசுவார். அப்பொழுது பிரமதேவரின் மற்றை முகங்

அவருடைய நான்கு முகங்களினின்றும் புறப்பட்ட சொற்பொழிவு நான்கும் (அப்பொழுது) பயன் பெற்றதாயின. (17)

ஏ வலிமிக்க வானவர்களே, வல்லமையினால் தங்கள் தங்கள் அதிகாரங்களை ஏற்று நடத்துபவர்களும், நாகம்போல நீண்ட கைகளையுடையவர்களும் ஆகிய நீங்கள் ஒருங்கு சேர்ந்து வந்த இவ்வரவு நல்வரவாகுக. (18)

பனியினால் ஒளி குறைந்த நக்ஷத்திரங்களையொப்ப, உங்களுடைய முகங்கள், முன்னிருந்த தம்மொளியை இழந்திருக்கின்றனவே!. இஃது என்?. (19)

தனது சுடரொளி அவிந்து வானவில்லை வழங்காதிருக்கும் இந்திரனது வஜ்ராயுதம், முனை மழுங்கியது போலக் காணப்படுகின்றதே!. (20)

மேலும், முன்பு பகைவரால் தடுக்க முடியாததாயிருந்த வருணன் கையிலுள்ள பாசம், இப்பொழுது கருட மந்திரத்தால் கட்டுண்டு வலி அழிந்த அரவம்போல எளிய நிலைமையை ஏற்றிருக்கின்றதே!. (21)

---

களின்றும் வெளிப்படும் அதே வார்த்தை அந்தப் பாகங்களில் கேட்போரில்லாமல் வீணாகி வந்தது.' இப்பொழுதோ தேவர்கள் நான்கு புறங்களிலும் சூழ்ந்து நிற்பதால் பிரமதேவருடைய நான்கு முகங்கள் வழியாகவும் வெளிப்படும் சொற்கள், கேட்போர் இருக்கின்றமையால் பயன் பெற்றன என்பது கருத்து. இதை எண்ணியே மூன்றாம் செய்யுளில் "எங்கும் (நாற்றிசைகளிலும்) முகமுள்ள" என்ற பொருளுள்ள "ஸர்வதோ முகம்" என்ற அடைமொழி பிரமதேவருக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றது. இங்கு "பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்ற நான்குவகைச் சொற்கள்..." என்ற உரை எழுதிய மல்லிநாதர் கவிமனமறியாது தவறினார். 'பரா' முதலியவைகளின் இலக்கணம் தெரிந்தார்க்கே இத் தவறு புலப்படும். விரிவஞ்சி விடுகின்றோம்.

20. முன் சுலோகத்தில் பொதுவில் வினவிவிட்டு, இனி, தனித் தனியாக வினவுகிறார். வானவில்லை வழங்காதிருக்கும்=இந்திர சாபத்தைப்போலப் பல நிறங்களைத் தனதொளியால் வெளிப்படுத்தாமலிருக்கும். முனை மழுங்கியதாக நினைக்க வானவில் வழங்காமையும், அதற்கு ஒளியவிதலும் காரணமெனக் கொள்க.

குபேரனது கதாயுதமில்லாக் கை, கிளை முறிந்த மரம் போன்றதாய், மனத்தைப் பெரிதும் வருத்தும் ஓர் அவமானம் அவனுக்கேற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கின்றதே !. (22)

யமனும், முன்பு எங்கும் எப்பொழுதும் பழுதாகாதிருந்த தனது தண்டாயுதத்தின் ஒளி முழுவதும் மாய்ந்துவிடவே, அதனைத் தீயவிந்த கொள்ளியைப்போல எளியதாய் நினைத்து, அதனால் நிலத்தைக் கீறிக்கொண்டிருக்கின்றானே !. (23)

இதோ நிற்கும் பன்னிரண்டு ஆதித்தியர்களும், தமது வெப்பம் விலகித் தண்ணியர்களாய்ச் சித்திரத்தில் வரையப் பட்டவர்களைப்போல எவரும் கண் கூசாமல் காணத்தக்க நிலைமையில் நிற்கின்றார்களே !. இஃது என்னே ?. (24)

மூடும் நீர் எதிர்த்து வருவதிலிருந்து அதனுடைய ஓட்டம் தடைப்பட்டிருப்பது ஊஹித்தறியலாவதுபோல, வாயுக்கள் தடுமாறுவதினின்றும் அவைகளின் வேகம் தடையுற்றிருப்பது ஊஹித்தறியக் கூடியவாறிருக்கின்றது. (25)

ருத்திரர் பதினொருவரும், இளம்பிறைகள் தமது சடைகளின் நுனிகளில் தொங்குமாறு தலைகளைக் குனிந்து நிற்பது, அவர்களுடைய அகத்திலிருந்து ஆண்மை அகன்றதை அறிவிக்கின்றதே !. (26)

தத்தம் அதிகாரங்களில் முன்பு உறுதிப்பாடடைந்த

---

23. இச் செய்யுளை, இந்திரனைப்பற்றிய செய்யுளை அடுத்துச் சேர்ப்பது உசிதமென நாதர் கூறுகின்றார். "யமோபி = யமனும்" என்று இவனுக்கு ஒரு சிறப்புக் கூறக் கருதி, முறை மாற்றி இவனை இறுதியில் வைத்து இந்திரனுக்குப் பிறகு வருணனை எடுத்தாரெனக் கொள்ளலாம்.

24. முக்கியர்களான நான்கு திக்பாலகர்களைச்சொல்லிவிட்டு, இனி மற்றைத்தேவர்களுள் கூட்டமாயுள்ளவர்களைக்குறிப்பிடுகின்றார்.

26. மல்லிநாதர் " க்ஷதஹுங்காரசம்ஸிந: " என்றபாடப்படி "ஹுங்காரம் போய் விட்டதாகத் தெரிவிக்கின்றது" என்று பொருள் கூறிவிட்டு, "ருத்திரர்கள் ஹுங்காரத்தையே சஸ்திரமாகக் கொண்டவர்களன்றோ" என்றும் எழுதுகிறார்.

27. "உபமா காளிதாஸஸ்ய = உவமையணி பூட்டுவதில் காளிதாஸர் சிறந்தவர்" என்று கூறுவர் புலவர். யாவரும் எளிதில் அறியக்கூ

உங்களை, மிக்க வல்லமை வாய்ந்த பகைவர்கள், பொதுவிதிகளைச் சிறப்பு விதிகள் விலக்குவதுபோல விலக்கினார்களா ?.(27)

ஆதலின், பிள்ளைகாள், நீங்கள் இங்கு வந்து என்னிடமிருந்து வேண்டுவது யாது ?. சொல்லுங்கள். உலகங்களைப் படைப்பது மட்டும் என்னிடமுள்ளது. அவைகளின் காப்பு உங்களிடமன்றோ நிலைத்திருக்கின்றது. (28)

பிறகு இந்திரன், இளங்காற்று அசைத்த தாமரை மலர்க்கூட்டத்தைப்போலப் பொலிகின்ற தன்னுடையஆயிரம் கண்களாலும் பிருகஸ்பதியை விடை கூறுமாறு தூண்டினான். (29)

இந்திரனுக்கு, ஆயிரம் கண்களைவிடச் சிறந்ததும் இரு கண்களையுடையதுமான பிறிதொரு கண் எனலாகும் அந்தப் பிருகஸ்பதி, கை கூப்பிக்கொண்டு பிரமதேவரிடம் வருமாறு விண்ணப்பஞ் செய்தார். (30)

---

டிய உவமையைத் தொடுப்பதே அவரதுபுகழ் பெருகக் காரணம். ஆயினும் சாஸ்திரஸம்பந்தமுள்ளசிற்சில உவமைகளையும் அருமையாய் அவர் கூறுவதுண்டு. இங்ஙனமுள்ள உவமைகள் அவருடைய காவியங்களில் நான்கோ ஐந்தோ இருக்கலாம். இவ்வுவமை ரகுவம்சத்திலுமுண்டு. ஆரம்பத்தில் பத்தொன்பதாம் செய்யுளிலுள்ளபடியே இங்கும் முடிவில் பொதுவாக எல்லாரையும் பற்றிப் பேசப்பட்டிருக்கின்றது.

29. மூலத்தில் "மந்தாநிலோத்தூத கமலாகர சோபிநா" என்றிருக்கின்றது. இது "நேத்ர ஸஹஸ்ரேண" என்பதற்கு அடைமொழி. இங்குப் பொருத்தம் நோக்கி கமலாகரபதத்தைத் தாமரைமலர்க்கூட்டமென்ற பொருளில் மொழிபெயர்த்தோம். ஆகரபதத்திற்குக் கூட்டமென்ற பொருள் நிகண்டுகளில் காணப்படுகின்றது. "இளங்காற்று அசைத்த (கமலாகர) தாமரைப் பொய்கையைப்போல" என்னும் உரை நன்கு பொருந்தாது. "தாமரை மலர்களைப் போன்றன கண்கள். அக்கண்கள் அடங்கிய கூட்டம் தாமரைப்பொய்கைக்கு ஒப்பானது" என்பது விவரணகாரரின் கூற்று. இமையோருக்கும் முயற்சி செய்தால் இமைக்கமுடியும் என்று ராமாநந்தர் எழுதுகிறார்.

30. பிருகஸ்பதிபகவான், இந்திரனுடைய ஆயிரம் கண்களும் காணமுடியாத அரிய பெரிய விஷயங்களைத் தமது புத்தியால் கண்டு சொல்லுகின்றாராதலின், இவர் இந்திரனுக்குச் சிறந்த ஒரு கண்ணா

ஏ பகவானே, தேவரீர் சொன்னது உண்மையே. எங்களுடைய பதங்களெல்லாம் பகைவரால் பறிக்கப்பட்டன. பிரபுவே, தேவரீர் ஒவ்வொருவருள்ளுமிருப்பதால் இது தேவரீருக்குத் தெரியாதிருக்குமோ?. (31)

"தாரகன்" எனப்படும் பெயருள்ள பெரிய அஸுரனொருவன், தேவரீரளித்த வரத்தால் கொழுத்து, உலகங்களெல்லாம் அழிவதற்காகத் தூமகேதுபோலக் கிளம்பியிருக்கின்றான். (32)

எவ்வளவு வெயிலைப் பரப்பினால் அத்தாரகாஸுரனின் வாவிகளிலுள்ள தாமரைப் பூக்கள் மலருமோ, அவ்வளவு வெயிலையே அவனது நகரில் ஸூரியன் பரப்புகின்றான். (33)

சந்திரன், பரமசிவனார் முடியிலணிந்திருக்கும் கலையொன்றை ஒழித்து, மற்றைக்கலைகள் யாவற்றையும் கைக்கொண்டு அத்தாரகாஸுரன் தன்னிடம் கருணை காட்டுமாறு அவனை அண்டித் தொண்டு புரிகின்றான். (34)

வாயு, அத்தாரகாஸுரனுடைய பூம்பொழிலில் வீசினால் ஒருகால் மலர்கள் தனது வேகத்தில் தன்னோடு வரக்கூடுமோ என்றும், அதனைக் களவாக நினைத்துத் தன்னைத் தாரகாஸுரன் தண்டிக்கக் கூடுமோ என்றும் எண்ணிப் பயந்து அப்பூங்காவில் செல்லாது, அவனது அருகிலேயே இருந்துகொண்டு, விசிறியாலுண்டாகும் காற்றினை விட அதிகமாகாமல் வீசிக் கொண்டிருக்கின்றான். (35)

---

கின்றார். இந்தக் கண்ணுக்கு இரு கண்களிருப்பது வியக்கத் தக்கதாம். "அர்த்தத்ருஷ்டி, தர்மத்ருஷ்டி என்பனவே இவ்விரு கண்கள். இதனால், பலிசக்கரவர்த்தியின் யாகத்தில் மஹாவிஷ்ணுவால் தர்மத்ருஷ்டி இழந்த சுக்கிராசாரியாரை விட பிருகஸ்பதிக்கு ஒரு மேன்மை ஸூசிப்பிக்கப்பட்டது" என்று நாதர் எழுகின்றார்.

32, "தேவரீரளித்த வரத்தால்" என்று தொடங்கியது இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு விதத்தில் தேவரீரே காரணமாகையால், இவற்றை நீக்க வேண்டிய பாரமும் தேவரீருக்குத்தான் என்பதைக்குறிக்கின்றது. தூமகேது என்பது தீங்கைக் குறிக்குமொரு நக்ஷத்திரமெனக் கூறுவர்.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER

ருதுக்கள் ஆறும், ஒன்றன்பின் மற்றொன்றாக முறைப்படி அத்தாரகாஸுரனுக்குத் தொண்டுபுரிவதை விடுத்து, ஒரே காலத்தில் ஒருங்கு சேர்ந்து தத்தமக்குரிய பூக்களை வெளிப்படுத்துவதிலும், அவைகளைச் சேர்த்து அவனுக்குக் கொடுப்பதிலும் ஊக்கமுள்ளவைகளாய்த் தோட்டக்காரர்களையொப்ப அவனை வழிபடுகின்றன. (36)

நதிகளின் நாயகன் (ஸமுத்திரம்) அந்தத் தாரகனுக்குக் கையுறையாகக் கொடுக்கத் தகுந்த இரத்தினங்களை, அவைகள் நன்கு முற்றித் தேறும் வரை நீருள் வைத்துப் பெரிதும் பிரயத்தினத்துடன் பாதுகாத்து வருகின்றான். (37)

வாஸுகி முதலிய ஸர்ப்பங்கள், தங்களுடைய படங்களிலுள்ள ரத்தினங்கள் ஒளிர்ந்தெரிய இரவில் அத்தாரகனைச் சூழ்ந்து தூண்டாவிளக்குகளாக நின்று குற்றேவல் புரிகின்றன.

இந்திரனும் அத்தாரகனது அருளை விரும்பி கற்பகமரங்களில் தொங்கும் ஆபரணங்களை அடிக்கடி தூதர்வழியாக அனுப்பி அவனை அனுகூலனாக்கிக் கொள்ளுகிறான். (39)

அவன் இவ்வாறு வந்தனை வழிபாடுகளைப் பெற்றும் உலகம் மூன்றனையும் வருத்திவருகின்றான். கொடியோன், நேருக்கு நேராக அபகாரஞ் செய்தாலல்லது உபகாரஞ் செய்வதால் அடங்கமாட்டான். (40)

---

37. கையுறை=பெரியோரைக் காணும் பொழுது கொடுக்கும் பொருள். இதனை இப்பொழுது காணிக்கை என வழங்குகிறார்கள்.

38. பாதாளவாஸிகளுடைய துன்பமும் தெரிவிக்கப்பட்டது.

39. துன்பத்துடன் வந்த வானவர்களுள் தலைவன் இந்திரனாகையால் அவனைப்பற்றி முதன் முதலில் பிரமதேவர் வினவினார். தேவகுருவாகிய பிருகஸ்பதியோ, உலகியற்படி தலைவனது கஷ்டத்தை முதலில் சொல்லவேண்டாமென்று நினைத்து முடிவில் கூறினார். இனிவரும் சில செய்யுள்கள் இந்திரனுக்கேற்பட்ட துன்பத்தையே விளக்குகின்றன. கற்பகமரங்களில் ஆபரணங்கள் தொங்கிக்கொண்டிருப்பனவாக வர்ணிப்பதுண்டு.

40. இக்கருத்தை மாககாவியம் இரண்டாம் ஸர்க்கம் ஐம்பத்துநான்காம் செய்யுளிலும் காண்க.

மிகு பரிவுடன் தேவமங்கையர் தங்கள் கைகளால் தளிர்களைக் கொய்யுமாறிருந்த நந்தனக்காவிலுள்ள மரங்கள், இப்பொழுது முறிதல் வீழ்தல்களை அறிகின்றன. (41)

சிறையாக்கப்பட்ட தேவமங்கையர், கவரிகளைக் கையிலேந்தி அவைகளினின்று புறப்படும் காற்றுத் தங்களது பெருமூச்சுடன் சேருமாறும், தாங்கள் உதிர்க்கும் கண்ணீர்த்துளிகள் அவற்றின் வழியாகச் சிந்துமாறும், அவற்றால் அத்தாரகன் துயில்கையில் வீசுகின்றனர். (42)

அத்தாரகாஸுரன் ஸூரியனுடைய குதிரைகளின் குளம்புகளால் மிதிக்கப்பட்ட மாமேருவின் சிகரங்களைப்பெயர்த்தெடுத்து, அவைகளைத் தன் வீட்டுத்தோட்டங்களில் செய்குன்றுகளாக நாட்டிவிட்டான். (43)

இப்பொழுது ஆகாசகங்கையில் மிகுந்திருப்பது, திசைக்களிறுகளின் மதஜலம் கலந்து கலங்கிய நீர்மாத்திரமே. அங்கிருந்த தங்கத்தாமரைகளோ அவனுடைய வாவிகளில் பயிராகின்றன. (44)

"மற்றை உலகங்களைச் சுற்றிப்பார்க்க நாம் முன்போல விமானத்திலேறிச் சென்றோமானால் ஒருகால் தாரகன் எதிர்ப்படுவானோ" என்றஞ்சி, தேவர்கள் நெடுநாளாகப் புறப்படாமையால் விமானங்கள் போகும்வழி பழுதுபட்டதுகொண்டு, அவர்கள் முன்போலச் சுற்றிப் பார்ப்பதில் விருப்பம் கொள்வதில்லை. (45)

யாகஞ்செய்பவர் யாகங்களைத் தொடங்கி ஹவிஸ்ஸினைக் கொடுக்க, அப்பொழுது மாயாவியாகிய அந்தத் தாரகாஸுரன்,

---

42. "ஸந்தப்ச்வாஸ" என்பது நாதர் பாடம். சூடுள்ள மூச்சுக் காற்று என்பது அதன் பொருள். "ச்வாஸஸாதாரணநிலை:" என்ற வடமொழிச்சொல் "சாமரை:" என்பதற்கு அடைமொழி. "ச்வாஸம் போன்ற காற்றையுடைய" என்று சிலர் உரை எழுதுகின்றனர். ஸாதாரணபதத்திற்குப் "பொதுவான" என்ற பொருளைக் கைக்கொண்டு, மூச்சுக் காற்றுடன் சாமரக்காற்றும் சேருகின்றது என வேறு சிலர் கருதுகின்றனர்.

43. ஸூரியமண்டலம் வரையில் சிகரங்கள் உயர்ந்திருக்கின்றன என்பது கருத்து.

நாங்கள் யாவரும் கண்டுகொண்டிருக்கும்பொழுதே அதனை அக்கினிவாயிலிருந்து பலாத்காரமாகப் பிடுங்கிக்கொள்கின்றான்.

இந்திரன் நெடுங்காலமாகத் தேடிய புகழே வடிவமெடுத்தாற்போன்ற "உச்சைச் சிரவஸ்" என்னும் உயர்வும் சிறப்பும் வாய்ந்த குதிரையை அத்தாரகன், அவனிடமிருந்து பறித்துவிட்டான். (47)

கொடியோனாகிய அந்தத் தாரகனிடம் எங்களுடைய உபாயங்கள் எல்லாம், ஸன்னிபாதத்தாலுண்டாகும் வியாதியில் வீரியம் பொருந்திய மருந்துகள் யாவும் வீணாவனபோல வீணாயின. (48)

நாங்கள் விஷ்ணுவின் சக்கராயுதத்தால் வெற்றி கிடைக்குமென்று எண்ணியிருந்தோம்; அந்தச் சக்கராயுதம் தீப்பொறி பறக்குமாறு அவனது கழுத்தில் உராய்ந்ததாயினும், முடிவில் செயலற்று அவன் மார்பிலணியொப்பக் கிடந்துவிட்டது.

---

46. இச்செய்யுளால் பூலோகத்தினருடைய கஷ்டங்களும் தெரிவிக்கப் படுகின்றன.

47. பேரும் பெருமையும் போயின என்று முடிக்கப்பட்டது.

48. ஸந்நிபாதமென்பதற்குச் சேர்க்கையென்பது பொருள். வாத பித்த கபங்களுடைய சேர்க்கையிலுண்டாகும் கெடுதியை எளிதில் நீக்கமுடியாது. வைத்திய சாஸ்திரத்தைத் தழுவி இந்த உவமை கூறப்பட்டது.

49. மற்றவரை விட விஷ்ணுவுக்கு ஓரேற்றம் சொல்லக் கருதி, முன் சுலோகத்தில் " எங்களுடைய உபாயங்களெல்லாம் பயனற்றுப்போயின " என்று முடித்துவிட்டுப் பிறகு இவ்விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டது. நாங்கள் வெற்றி பெற நினைத்த விஷ்ணுசக்கரமும் பாழாயிற்றென்று சொல்வதிலிருந்து ஏற்றம் வெளிப்படுகிறது. கீழ் தேவர்களுடைய துயரங்களும், அவனுக்கு அவர்கள் செய்யும் பணிவிடைகளுமே கூறப் பட்டன. கொடியோன், எதிர்த்து அபகாரம் செய்வதால் மட்டுமே அடங்குவான் " என்றும் பேசப்பட்டது. அவ்வாறாயின், நீங்கள் தண்டோபாயத்தை ஏன் கைக்கொள்ளவில்லை என்று பிரமதேவர் எழுப்பக் கூடிய வினாவிற்கு விடையாக, எங்களுள் சிறந்த விஷ்ணுவின் தண்டோபாயமே பலிக்காதிருக்குங்கால் மற்றவர்களுடைய அவ்வுபாயம் பயன் படுமோ ? என்று பிருகஸ்பதி தெரிவிக்கிறார்.

ஐராவதத்தைத் தோல்வியுறச் செய்த அவனுடைய ஆனைகள், புஷ்கரம் ஆவர்த்தகம் முதலிய மேகங்களின்மீது கரை முட்டுவிளையாட்டைப் பயில்கின்றன. (50)

50. இதுவரை தாரகனைப்பற்றியே பேசப்பட்டது. இச்செய்யுளால் அவனைச் சார்ந்தவைகள் செய்யும் துன்பத்தை விளக்குகின்றார். இதற்கு ஓர் உதாஹரணமாக யானைகள் கூறப்பட்டன. அவனைச் சேர்ந்த மற்றவைகளும் இவ்வாறுள்ளன என்று அறியவேண்டும். இங்குச் சில கேள்விகள் பிறக்கின்றன; அவை—முன் கூறியபடி இந்திரனை இறுதியில் வைத்துப் பேசியது ஏற்றதே. ஆயின், அவனுடைய விஷயங்களை மாத்திரமன்றோ பின்பு பேசவேண்டும். நடுவில் விஷ்ணுவைப் புகவிட்டது தகுமா? மேலும், இந்த ஐம்பதாஞ் செய்யுள் இந்திரனது ஐராவதத்தைப் பற்றியும் மேகங்களைப் பற்றியும் கூறுவதால் நாற்பத்தெட்டாவதாக இருக்க வேண்டுமல்லவா? நாற்பத்தெட்டாம் செய்யுள் "எங்களுடைய உபாயங்களெல்லாம் வீணாயின" என்று கூறுகின்றமையால், அது ஐம்பதாவதாக முடிவில் வைக்கப்படவேண்டுமன்றோ. என்பன. இவ்வினாக்களுக்கு விடைகள் வருமாறு— பிரமதேவர் குறிப்பிட்டுக் கேட்ட சில தேவர்களுடைய விஷயங்களும், இங்கு வாராமையாலோ வேறுகாரணத்தாலோ அவரால் கேட்கப்படாத சிலருடைய விஷயங்களும் பிருகஸ்பதியின் மறுமொழியில் பேசப்பட்டிருக்கின்றன. முப்பத்திரண்டாம் செய்யுளில் பொதுவாக "லோகங்களின் அழிவிற்காகவே தூமகேதுபோல அத்தாரகன் தோன்றியிருக்கின்றான்." என்று கூறப்பட்டது. பின்னர், ஸூரியனும், இருபத்தாறும் செய்யுளில் குறிப்பிடப்பட்ட சந்திரனும், வாயுவும், "காலமும் அவனிடம் ஆள்பட்டு நிற்கின்றது" என்பது தெரியுமாறு ருதுக்களும், ஸமுத்திரத்தைச் சொல்லும் வழியாக வருணனும், பாதாள வாஸிகளுடைய பயத்தையும் உணர்த்த வாஸுகி முதலியோரும், (வருணனைப்பற்றிய இருபத்தொன்றும் செய்யுளில் அவனையும் ஸர்ப்பத்தையும் சேர்த்துக் கூறியிருப்பது நினைக்கற்பாலது) இறுதியில் தேவராஜனை இந்திரனும் பிரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றனர். அதுவரையில் தேவர்கள் அத்தாரகனுக்குச் செய்யும் குற்றேவல்களே பேசப்பட்டன. இவைகளால் திருப்தியுறு அத்தாரகன் வருத்தாதிருக்கின்றானா என்னும் கேள்விக்கு நாற்பதாம் செய்யுளால் ஸமாதானம் கூறப்பட்டது. பின்பு ஏழு சுலோகங்களால் அவன் செய்யும் அநியாயச் செயல்கள் தெரிவிக்கப்பட்டன. நாற்பத்தாறும் செய்யுளால் அந்தத் தாரகன் பூலோகத்தார்க்கிழைக்கும் தீங்கும் குறிப்பிடப்பட்டது. இவைகளின் முடிவு கூறும் நாற்பத்தெட்டாம் செய்யுளில் "எங்களுடைய உபாயங்களெல்லாம் வீணாயின"

ஆகையால் மோக்ஷம் பெறக்கருதுவார், ஸம்ஸாரத்தை விலக்கக், கருமபாசத்தால் ஏற்பட்ட கட்டை அறுக்கும் தர்மத்தைச் செய்ய விரும்புவதைப் போல, நாங்கள், அத்தாரகாஸுரனை அழிக்க படைத்தலைவனொருவனைத் தேவரீர் படைக்க விரும்புகின்றோம். (51)

தேவஸைன்னியத்தைக் காப்பாற்றி நடத்தும் தலைமையுள்ள அந்த ஸேனாபதியை முன்னிட்டுக்கொண்டு இந்திரன், சிறையிலகப்பட்ட மங்கையை மீட்பதுபோல இழந்துபோன ஜயலக்ஷ்மியை மறுபடியும் மீட்கக் கூடும். (52)

வியாழன் இவ்வாறு பேசி முடித்தபின் பிரமதேவர் மேகமுழக்கத்திற்குப் பின் உண்டாகும் மழையைப் போல மனத்திற்கினிய வார்த்தையை வருமாறு புகன்றார். (53)

---

என்று பேசப்பட்டது. முன்னுள்ள செய்யுள்களிலிருந்து "ஸாமம்" "தானம்" என்ற இரு உபாயங்களும் பயன்படாமற் போனமையை அறியலாம். பேதமும் அவ்வாறே ஆயிருக்குமென்று ஊஹிக்கக்கூடும். தண்டோபாயம் ஒன்று தான் மிகுந்தது. அதுவோ இங்ஙனமுள்ள கொடியோனுக்குரியது. அதனை உபயோகித்திருக்கலாமே என்ற சங்கை தீர, நாற்பத்தொன்பதாம் செய்யுளில் விஷ்ணுவின் பிரஸ்தாவம் வந்தது. விஷ்ணுவின் செய்தியே இவ்வாறிருக்க, மற்றவர்களது செய்தியைக் கூறவும் வேண்டுமோ என்பது கருத்து. இதனை முன்னர் வைக்காதது விஷ்ணுவுக்கும் தண்டோபாயத்திற்குமுள்ள சிறப்பினைத்தெரிவிக்கவேயாம். ஐம்பதாம் செய்யுளில், தாரகனைச் சேர்ந்தவைகளின் அநீதியைத் தெரிவிக்க, ஒரு விஷயம்மட்டும் உதாஹரணமாகக் காட்டப்பட்டது. முடிவில் கூறப்பட்ட இந்திரனைச் சேர்ந்தபொருள்களே பொதுவாகவும் சிறப்பாகவும் மேலே கூறப்பட்டிருக்கின்றன. உபேந்திரரான விஷ்ணுவும் இந்திரனைச்சேர்ந்தவரே எனக்கொள்க. ஆகையால் இங்குச் செய்யுள்களை இடம் மாற்ற வேண்டியதில்லை.

51. அவ்வாறுள்ள தர்மம் நிவ்ருத்தி தர்மமே. இங்கு வேதாந்த சாஸ்திரஸம்பந்தமுள்ள உவமையைக் கூறினர். நெடுநாளாகத் தொடர்ந்துவரும் கருமத்தை அறுப்பது எப்படி எளிதல்லவோ, அப்படி அவனை அழிப்பதும் எளிதல்ல என்பது இந்த உவமையால் பெற்றதாம்.

52. "ஸுரச்ரியம்" என்பது நாதர் பாடம். தேவர்களுடைய லக்ஷ்மியை ( சீர் ) என்பது அதற்குப் பொருள்.

53. பிருகஸ்பதியின் வார்த்தை கர்ஜிதத்திற்கொப்பாகவும். பிரமதேவரது வார்த்தை அதன்பின்னுண்டாகும் மழைக்கொப்பாகவும் கூறப்படுகின்றன. தேவர்களது முன்னிலையில் தோன்றிய பிரமதேவரை

முதலாகவோ, உங்களுடைய விருப்பம் கைகூடும். நன்கதொரு காலம் வரும். அது காறும் பொறுத்திருங்கள். இக் காரியம் நிறைவேற, நானே ஒருவனைப் படைக்கமாட்டேன்.

அந்த அஸுரன் என்னிடமிருந்துதான் இவ்வாறுள்ள சீர்களைப் பெற்றான். ஆகையால் என்னிடமிருந்தே அவன் அழிவுபடுவது தகாது. விஷவிருக்ஷமாயினும் நட்டு வளர்த்த பின்னர் அதனை வெட்டுவது ஏற்றதன்று. (55)

இதனையே அவ்வஸுரன் முன்னர் என்னிடம் வரமாக வேண்டினான். நானும் "அவ்வாறே ஆகுக" என்று உறுதி கூறினேன். அப்பொழுது நான் அவ்வாறு வரமளித்து அவன் தவத்தை நிறுத்தாவிடின், அஃது உலகங்களையெல்லாம் அப்பொழுதே எரித்திருக்கும். (56)

அந்தத் தாரகன் கையில் கதையை எடுத்துக்கொண்டு போர்க்களத்தில் நேரிட்டு வருவானாகில், பரமசிவனார் வீரியத்

---

ஸூரியனுக்கொப்பாகக் கூறினார். தவித்துப் போந்த தேவர்களைத் தேற்றுவதற்காகப் பிரமதேவர் தொடங்கிய மறுமொழி மழைக்கொப்பாகக் கூறப்பட்டது. "ஆயிரம் மடங்கதிகமாகப் பொழிவதின் பொருட்டே ஸூரியன் நிலத்திலிருந்து நீரை இழுக்கின்றான்." என்ற பொருள்கொண்ட "ஸஹஸ்ரகுணமுத்ஸ்ரஷ்டும்" என்ற ரகுவம்சச் செய்யுள் இங்கு நினைக்கற்பாலது.

54. "காலங் கருதி யிருப்பர் கலங்காது—ஞாலங் கருது பவர்." "பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம் பார்த்துள்வேர்ப்பரொள் ளியவர்." என்று திருக்குறளும் கூறுகின்றது.

55. எட்டி மரமானாலும் வைத்த மரத்தை வெட்டலாகாது என்பது பழமொழி.

56. "வரேணைசமிதம்" என்பது நாதர் பாடம். மல்லிநாதர் பாடம் "வரேண சமிதம்" என்பது. "உலகங்களை எரிக்க வல்லமையுள்ள அத்தாரகனுடைய தவம் வரங்கொடுத்து நிறுத்தப்பட்டது" என்று அப்பாடப்படி பொருள்கொள்ளல்வேண்டும். ஆனால் இந்தப் பாடத்தில் மூலத்திலுள்ள "ஹி" என்ற சொல்லுக்குப் பொருத்தம் நன்றாயமையாது.

57. "ஸம்யுகே ஸாம்யுகீநம் தமுத்யதம்" என்று மல்லிநாதர் படிக்கின்றார். "ஸம்யுகே உத்யதம் ஸாம்யுகீநம்" என்று அன்வயம் காட்டி

தின் அம்சமாய்ப் பிறக்கும் புதல்வனைத் தவிர வேறு எவன் அவனை எதிர்த்து நிற்கக்கூடும். (57)

அத் தேவனோ பிருகிருதிமண்டலமென்னும் இருளுக்கு அப்புறமுள்ள பேரொளி. அவரது பெருமைப்பெருக்கினை அளந்தறிய என்னாலும் இயலாது. விஷ்ணுவினாலும் முடியாது.

நீங்கள், ஸமாதிகொண்டு அசையாது நிற்கும் அச்சிவபிரானது மனத்தை, இரும்பை அயக்காந்தத்தால் இழுப்பது போலப் பார்வதியின் ரூபத்தால் இழுக்க முயலுங்கள். (59)

---

"யுத்தத்தில் இறங்கியவனும், யுத்தத்தில் ஸமர்த்தனுமான" எனப் பொருள் கூறுகின்றார். இங்கு நாதர் பாடமே சிறிது சிறந்தது.

58. திக்பாலகர்களுள் சேர்ந்த ருத்திரர்களும், திரிமூர்த்திகளுள் சேர்ந்த ருத்திரனும் துரீயரான ஸதா சிவப்பெருமானாரிலிருந்து வேறுபட்டவர்கள் என்பதும், அவருடைய அம்சபூதர்கள் என்பதும், இவர்களுடைய வலிமை முதலியன அளவிற்பட்டவைகளே என்பதும் சைவர்களின் கொள்கை. ஆதலின் இச் செய்யுளுக்கு இருபத்தாறும் செய்யுளோடு முரண்பாடு இல்லை என்பர். சிவபிரானது முடியைக் காணச் சென்ற பிரமனும், அடியைக்காணச் சென்ற திருமாலும் முடியாமல் திரும்பினர் என்ற சிவ புராணக் கதை இங்குக் குறிக்கப்பட்டதென்பர். 'தம:பாரே ப்ரதிஷ்டிதம்" என்ற மூலத்திற்குத், "தமோகுணத்தைக் கடந்த" எனப் பொருள் கூறுகிறார் மல்லிநாதர். "அவித்தைக்கு அப்புறமுள்ள" என நாதர் எழுதுகின்றார். பேரொளிக்குத் தமஸ் என்னும் இருளின் ஸம்பந்தம் இராதன்றோ எனவும் கொள்க. இந்தப் பிரமதேவரது மொழியும், பிரமதேவரைப் பற்றி தேவர்கள் கூறிய துதிமொழியும் ஒன்றோடொன்று முரண்படாவோ வெனில், முரண்படா. ஸ்ரீகாளிதாஸர் மும்மூர்த்திகளையும் ஒரே நிதியில் ஏற்றத் தாழ்வுகளின்றி நினைக்கின்றாராதலின், அவர் ஆங்காங்கு அவ்வத் தேவதையை ஏற்றியே புகழ்வார். ரகுவம்சத்திலுள்ள விஷ்ணுஸ்துதியைப் பார்த்தாலும் இவ்வுண்மை வெளிப்படும். நம் காளிதாஸரே இந்தக் குமாரஸம்பவம் ஏழாம் ஸர்க்கம் நாற்பத்து நான்காம் செய்யுளில் "ஒரு மூர்த்தியே மூன்றாகப் பிரிந்தது. ஆகையால் இவர்களுள், முதல்வன் பிந்தியவன் என்னும் தன்மைகள் மூன்று பெயர்களுக்கும் பொதுவானவையே; ஒருகால் விஷ்ணுவுக்குச் சிவனும், சிவனுக்கு விஷ்ணுவும், இவ்விருவருக்கும் பிரமனும், பிரமனுக்கு இவ்விருவரும் முதல்வராக நிற்பார்கள்" என்று கூறி சைவவைஷ்ணவச் சண்டையை விலக்குகிறார்.

பரமசிவனாரும் நானும் எங்களிருவருடைய வீரியத்தை வெளியிடத் தொடங்கினால், அதனை வஹிக்க, முறையே பார்வதிக்கும், அப்பரமசிவனாரின் ஜலமயமான மூர்த்திக்கும் மாத்திரமே சக்தி உண்டு. (60)

அந்த நீலகண்டனாரது புதல்வன் உங்களுக்காகப் படைத்தலைமையை ஏற்றுத் தனது வீறு கொண்டு, சிறையில் கிடக்கும் தேவமங்கையர்களுடைய சடைப் பின்னல்களை அவிழ்க்கப் போகின்றான் (61)

பிரமதேவர் இவ்வண்ணம் தேவர்களுககு மறுமொழி கூறிவிட்டு மறைந்தார். தேவர்களும் "இனி இன்னது செய்வது" என்பதை மனத்தில் உறுதிசெய்துகொண்டு ஸுவர்க்க லோகம் சென்றார்கள். (62)

அங்கு இந்திரன் நன்காராய்ந்து நிச்சயித்து, "எடுத்த காரியம் நிறைவேறவேண்டுமே" என்ற கவலையாலும் ஆவலாலும் இரு மடங்கு வேகங்கொண்ட மனத்தால் மன்மதனை நாடினான்.

பின்னர் மன்மதன், அழகிய பூவையின் புருவக்கொடி போலச் சிறிய நுனியுள்ள வில்லை ரதியின் கைவளை படடுத் தழும்பேறிய தன் கழுத்தில் சார்த்திக்கொண்டு, தன் தோழனை வஸந்தன் அவனது கையில் இளமாம்பூவாம் அம்பினை எடுத்துக்கொண்டு பின் தொடர, கைகூப்பியவண்ணம் இந்திரனை வந்தணுகினான். (64)

இரண்டாம் ஸர்க்கம் முற்றிற்று.

---

61. "ஆத்மா வை புத்ரநாமாஸி=தானே புத்திரனைப் பிறக்கின்றான்" என்று சுருதி கூறுகின்றது. பத்தினிகள் பதியை விட்டுப் பிரிந்திருக்கும்பொழுது தங்களுடைய கூந்தலைச் சீவி முடியாமல் சடை போல ஒன்றாகப் பின்னிவிடுவார்களென்றும், பதிகளை மீண்டும் அடைந்தபின்பே அப்பின்னல்களை அவிழ்ப்பார்களென்றும் காவியங்களில் கூறுவது வழக்கு.

64. மன்மதனுக்குக் கொடுத்திருக்கும் அடைமொழிகளால் மூன்றும் நான்காம் ஸர்க்கங்களுடைய விஷயம் குறிப்பிடப்படுகின்றது.

இரண்டாம் ஸர்க்கம் முற்றிற்று.

## மூன்றாம் ஸர்க்கம்.

அப்பொழுது இந்திரனுடைய ஆயிரம் கண்களும், தேவர்களனைவரையும் விட்டு ஒன்று சேர்ந்து அம் மன்மதனையே நாடிச் சென்றன. பெரும்பாலும் பிரபுக்கள் பயனையே விரும்புவாராதலின், தங்களை அண்டி நிற்பவரிடம் அவர்களுக்குள்ள ஆதரம் ஒரே நிலையில் நிற்பதன்று. (1)

இந்திரன் "இங்கு உட்காருக" என்று தனது ஆஸனத்தினருகே ஓரிடம் காட்ட, மன்மதன், பிரபுவின் அருளைத் தலையாற்கொண்டு, அவனிடம் கீழ்வருமாறு தனிமையில் கூறினான்.

புருஷர்களுள் தாரதம்மியத்தை அறிந்தவரே, உலகங்களில் தங்களுக்கு ஆகவேண்டிய காரியம் யாது?. கட்டளையிடுக. தாங்கள் என்னை நினைத்ததன் மூலம் என்னிடம் காட்டிய அருளைத், தங்களது கட்டளையை நிறைவேற்றி மேன்மேலும் பெருக்க விரும்புகின்றேன். (3)

எவன் தங்களது பதத்தை விரும்பிப் பெருந்தவங்களை மிகப் புரிந்து தங்களுக்கு வெறுப்பினை உண்டாக்குகின்றான்?. கூறுக. அவனை அப்பு பூட்டப்பெற்ற எனது வில்லின் கட்டளைப்படி நடக்கச்செய்கின்றேன். (4)

---

1. தீரோத்தத நாயகனுக்குக் காரியத்தில் தான் கண். ஆகையால் இந்திரன் இவ்வாறு செய்தது குற்றமன்று என்பர். நாதர் "ஆச்ரிதேபி" என்ற பாடத்தையும் கைக்கொண்டு, "பிரபுக்கள் காரியம் ஆகவேண்டிய ஸமயத்தில் தமது கௌரவத்தை விட்டு ஏவலாளியிடமும் மதிப்புக் காட்டுவார்கள்" என்று கருத்து எழுதுகிறார்.

2. இடங்கொடுத்ததே அருளெனக்கொள்ளலாம். "மதிப்புடன் பார்த்த பார்வை முதலியனவற்றை இங்கு அருள்" என்பது விவரணம்.

4. "பிரதிநாயகனான மன்மதன் தீரோத்ததனாகையால் முடியாத காரியங்களையும் முடித்துவிடுவதாகப் பேசுகின்றான். இவனது பேச்சு ஆறு செய்யுட்களாற் கூறப்பட்டது. அவனது விருப்பப்படி வினுக்களை எழுப்புகின்றான். முதல் ஐந்து சுலோகங்களிலுள்ள விஷயங்கள் மன்மதனைமட்டும் சார்ந்தன. ஆறும் சுலோகத்திலுள்ளது பொதுவான

தாங்கள் ஒப்பாத யாவன், மறு பிறப்பிலுள்ள துன்பத்திற்கு அஞ்சி, வீடு பெறும் வழியை நாடி நிற்கின்றான்?. அவனைப் புருவங்கள் அசையப் பேரழகுபெறும் பாவையர்களுடைய கடைக்கண் பார்வைகளில் நீண்டகாலம் கட்டுண்டு கிடக்குமாறு செய்வேன். (5)

தங்களுக்குப் பகைவனாயிருக்கும் ஒருவன், நீதிநூலைச் சுக்ராசார்யரிடமிருந்து கற்றவனாயிருப்பினும், அவனிடம் நான் ஆசை என்னும் ஒற்றனை ஏவி அவனுடைய அறம் பொருள் இரண்டையும், திரண்ட பிரவாஹம், ஆற்றின் இரு கரைகளையும் இடிப்பதுபோல இடித்துவிடுகின்றேன். சொல்லுங்கள். (6)

பதிவ்ரதா தர்மத்தைக் கைக்கொண்டு கஷ்டப்படும் யாவள், தனது அழகு காரணமாக உங்களது நிலைபெறா நெஞ்சத்தினுட் புகுந்தனள்?. மொழிக. அவள் வெட்கத்தை விட்டுத் தானாகவே வந்து உமது கழுத்தில் கைகோத்து இறுகத் தழுவவேண்டுமென விரும்புகின்றீர்களா ?. (7)

---

விஷயம். இஷ்டலாபத்திலும் அனிஷ்டபரிஹாரமே முக்கியமாகையால் அதனையே முதலில் பேசுகின்றான். அதனிலும் அடியோடு எல்லாம் தொலைந்துபோகக் கூடிய அநிஷ்டத்தைப் பரிஹரிக்க அதனை எல்லாவற்றிற்கும் முன்பு வினவுகிறான்." என்று நாதர் கூறுகின்றார்.

5. "இது ஏகதேசாநிஷ்டமாம். உலகியலில் வைக்கப்பட்ட ஒருவன், அதனைத் தவிர்த்து வீடு பெற விரும்புவது பிரபுவுக்கு ஸம்மதமாயிராது." என்றார் நாதர். புருஷார்த்தங்களுள் முக்கியமான மோக்ஷபுருஷார்த்தம் இங்குப் பேசப்பட்டது.

6. அறம், பொருள் என்ற புருஷார்த்தங்கள் இங்குப் பேசப்பட்டன. "ஐந்தாம் செய்யுள் நிகழும் அனிஷ்டத்தையும், இந்தச் செய்யுள் வரப்போகும் அனிஷ்டத்தையும் குறிப்பிடுகின்றன" என்றார் நாதர்.

7. இதுமுதல் இஷ்டலாபத்தைப் பற்றிப் பேசுகின்றான். மன்மதனால் செய்யக் கூடிய இஷ்டம், இன்பமென்னும் காமபுருஷார்த்தமே. மற்றைப் புருஷார்த்தங்களுக்குத் தான் இடையூறுகளை விளைவிப்பதாகக் கூறினான். காமபுருஷார்த்தத்திற்குத் துணைசெய்வதாகப் பேசுகின்றான். "சிருங்காரரஸம், ஸம்போகம் (கலவி) வியோகம் (பிரிவு) என இரு வகுப்புகளுள்ளது. ஸம்போக சிருங்காரவிஷயத்தில் இனி மன்மதன் செய்யவேண்டியதொன்றுமில்லை. வியோக சிருங்காரத்தி

ஏ காதல் கொண்டவரே, கலவிகாலத்தில் தங்களிடம் ஏதோ ஒரு குற்றத்தைக் கண்டு ஊடலேற்ற எவள், நீங்கள் அடிபணிந்தும், தனது கோபத்தை மாற்றாமல், தங்களைப் புறக் கணித்தனள்?. அவள், தனது சரீரத்தில் பெரிதும் எரியும் காமத்தீயினைப் பொறுக்கமாட்டாமல் தளிர்ப் படுக்கையையே தனக்குத் தஞ்சமாகக் கொள்ளும்படி செய்கின்றேன். (8)

ஏ வீரரே, அருளுக. தங்களது வஜ்ராயுதம் இளைப் பாறலாம். எந்த அஸுரனாயினும், அவனது கைவன்மையை எனது கணைகளால் கழியச் செய்து, கோபத்தால் உதடு துடிக்க நிற்கும் பெண்களிடமிருந்தும் பயப்படும்படி அவனை நான் நடத்துவேன். (9)

---

னும், கலக்கும்முன் பிரிவு, கலந்தபின் பிரிவு என இருவகைகள் உண்டு. இவைகளே ஏழாம் செய்யுளிலும் எட்டாம் செய்யுளிலும் முறையே கூறப்படுகின்றன" என்று நாதர் எழுதுகின்றார். மனத்திற்கு அடைமொழியாகக் கூறிய "லோலம்"என்ற வடசொல்லுக்கு "ஆசைகொண்ட" என்ற பொருள் கூறுகின்றார் மல்லிநாதர். பதிவ்ரதா தர்மத்திலிருப்பது வீண் கஷ்டப்படுவதேயாம் என்பது மன்மதன் கருத்து.

8. "நாயிகைகளுள் தன்னவள், பிறருடையவள், பொதுவானவள் என மூன்று வகை உண்டு. ஏழாம் செய்யுளால் முதல்வளைப் பற்றிப் பேசப்பட்டது. மற்றவர்களைப் பற்றி இங்குப் பேசப்படுகின்றது." என்பது மல்லிநாதரது கூற்று. "காதல் கொண்டவரே" என்ற ஸம்போதனம் இங்கு மிகு பொருத்தமுடையது.

9. மற்றவர்கள் செய்யவேண்டியதையும் நானே செய்து முடிப்பேன் என்கிறான். "வீர" என்ற ஸம்போதனம் இங்குப் பொருந்தியது.

மன்மதன் வினவிப்பேசிய ஆறு செய்யுட்களுள் முதல் செய்யுளால் ஸுகானுபவத்திற்காக இந்திரபட்டத்தையே விரும்புகிறவன் பேசப்பட்டான். விஷயஸுகங்களுக்குள் இந்திரனது ஸுகம் உலகத்தோரால் சிறந்ததாக மதிக்கப்படுகின்றமையும் இங்கு நினைக்கற்பாலது. இரண்டாம் செய்யுளால் விஷய ஸுகங்களை விரும்பாதவன் பேசப்பட்டான். இந்திரனது ஐசுவரியத்தைவிட முக்தனது ஐசுவரியம் நிரம்பவும் மேம்பட்டது என்பதையும் இங்கு நாம் நினைக்கவேண்டும். இதனை "ஸர்வேஸ்மை தேவா பலிமாவஹந்தி" "எதிரெதிரிமையவரிருப்பிடம் கொடுத்தனர்" என்பன போன்ற பிரமாணங்களால் அறியலாம். "அழுதல

...VANMIYUR. MADRAS-41


நான் மலர்வாளியுடையவனாயினும், இந்த வஸந்தனொருவனை மட்டும் துணைவனாகக்கொண்டு, தங்களது அருளால், பினாகமென்ற வில்லைக் கையிலேந்திய சிவபிரானையும் மனவலி குலையச் செய்துவிடுவேன். எனவே, மற்றை வில்லாளிகள் எனக்கு ஒரு பொருளா?. (10)

---

......மாஹா:— சீரும் சிறப்புமாக வாழும் ராஜ்யம் இந்திரபதந்தான்" என்று ரகுவம்சத்தில் கூறியபடி, அறத்தாலும் பொருளாலும் தனது ராஜ்யத்தைச் சீர்ப்படுத்தி மண்ணுலகிலேயே இந்திரபதத்தைப் பெற்று இந்திரனுக்கு ஸமானமாக விளங்குபவன் மூன்றாம் செய்யுளால் பேசப்பட்டான். எனவே இம்மூன்று செய்யுட்களாலும், தானே இந்திரனாக முயலுபவனும், இந்திரனைவிட மேம்பாடடைய விரும்புபவனும், இந்திரனுக்கு நிகராக எண்ணிக்கொள்பவனும் பேசப்பட்டனர். நான்கு புருஷார்த்தங்களுள் காமன் விரோதியாயிருக்கும் அறம் பொருள் வீடு என்ற மூன்று புருஷார்த்தங்களும் கூறப்பட்டன. இவை அனிஷ்ட பரிஹாரங்களுமாயின. இனி காமன், அனுகூலனாயிருக்கும் இன்பம் என்ற மூன்றாம் புருஷார்த்தம் இரண்டு செய்யுட்களால் பேசப்படுகின்றன. இவற்றுள் கிடையாதது கிடைத்தல் என்ற யோகம் முதற் செய்யுளாலும், கிடைத்ததைக் காப்பாற்றல் என்ற க்ஷேமம் இரண்டாம் செய்யுளாலும் கூறப்பட்டன. இவ்வைந்து செய்யுட்களும் மன்மதனால் மட்டும் ஸாத்தியங்களான காரியங்களையே குறித்தன. மற்றவர்கள் ஆயுதபலத்தால் நிறைவேற்றவேண்டிய காரியத்தையும் தானே முடித்துவிடுவதாக ஆறாம் செய்யுளில் மன்மதன் கூறுகின்றான். இவ்வாறும் வினாவுள்ள செய்யுட்கள். வினாவில்லாத ஏழாம் செய்யுளால் முற்கூறியவைகளையெல்லாம் ஒருங்கு சேர்த்துத் தனது வலிமையை வெளியிடுவதன் மூலமாகக் கூறுகின்றான் மன்மதன் எனச் செய்யுள் முறைவைப்புக்குக் கருத்துக் கூறுவதும் பொருந்தும்.

10. "தங்களது அருளால்" என்று கூறி, மன்மதன், முன்பு தான் காட்டிய செருக்கினைப் பரிஹரிக்கின்றான். இக்கருத்து "ஸித்யந்தி... நாகரிஷ்யத்" என்ற சாகுந்தளச் செய்யுளிலும், "நநு வஜ்ரிண...... நாகான்" என்ற விக்ரமோர்வசீயச் சுலோகத்திலும் காணப்படுகின்றது. "மலர்வாளியுடையவன்" என்ற அடைமொழி, மன்மதனுக்குத் துணைக்கருவி நன்கு கிடையாதென்பதையும், "பினாகம் கையிலேந்திய" என்ற அடைமொழி, சிவபிரானுக்குத் துணைக்கருவி நன்றாயமைந்திருக்கின்றதென்பதையும் குறிப்பிடுகின்றன.

பின்னர் இந்திரன், தொடையிலிருந்த தனது காலை எடுத்துப் பாத பீடத்தின் மீது வைத்துக்கொண்டு, தான் கருதிய காரியத்தில் வல்லமையிருப்பதாகப் பேசிய மன்மதனைப் பார்த்து வருமாறு மொழியலானான். (11)

தோழ, நீ சொல்லிய யாவும் உன்னிடம் பொருந்தியனவே. வஜ்ராயுதமும் நீயுமன்றோ எனக்கு இரு அஸ்திரங்கள். தவப் பெருமை வாய்ந்த பெரியாரிடம் எனது வஜ்ராயுதம் பயன்படாது. எங்கும் சென்று காரியத்தை நிறைவேற்றும் அஸ்திரம் நீயே. (12)

உனது வலிமையை நான் அறிவேன். ஆகையாலன்றோ என்னைப்போன்ற உன்னைப் பெரிய காரியத்தில் ஏவப்போகின்றேன். ஆதி சேஷனுக்குப் பூமியைத் தாங்க வல்லமையிருப்பதை அறிந்தல்லவா விஷ்ணு தமது தேகத்தைத் தாங்குமாறு அவனுக்குக் கட்டளையிட்டிருக்கின்றார். (13)

"எனது கணை சிவபிரானிடமும் செல்லும்" என்று நீ குறிப்பிட்டமையால், எங்களது காரியம் உன்னால் அங்கீகரிக்கப்பட்டதுபோலாயிற்று. பொல்லாப் பகைவனிடமகப்பட்டுள்ள வானோரனைவரும் விரும்புவதும் இதுவே என்று நீ அறிவாயாக.

இங்கு நிற்கும் தேவர்களெல்லோரும், பரமசிவனுருக்குப் பிறக்கும் பிள்ளையைப் படைத்தலைவனாகக் கொண்டு தாங்கள் வெற்றிபெற விரும்புகின்றனர். பிரமதேவருக்கும் பிதாவாகிய அப்பெருமானோ, பரமாத்மாவிடத்தில் மனத்தைச் செலுத்தித் தவம்புரிந்து வருகின்றார். உன் கணையொன்றே அவரை வசப்படுத்தப் போதுமானது. (15)

---

12. இது முதல் பத்துச் செய்யுட்களால் இந்திரன் மன்மதனைப் புகழ்ந்து அவனுக்கு உத்ஸாஹ மூட்டுவது, அழகாயும் கொண்டாடத்தக்கதாயுமிருக்கின்றது.

13. "என்னைப் போன்ற உன்னை ஏவப்போகின்றேன் — நான் போகவேண்டிய ஸ்தானத்தில் உன்னைப் போகத் தூண்டுகின்றேன்." என்றும் பொருள் கூறலாம்.

15. "ப்ரஹ்மாங்கபூ:" என்பது மூலத்திலுள்ள வட சொல். இதற்கு "மந்திர நியாஸம் செய்தவர்" என்று மல்லிநாதர் பொருள் எழுதுகிறார்.

மனத்தை அடக்கியாரும் அவருக்குத், தாயவரும் இமவானது புதல்வியுமான பார்வதிமீது ஆசையை உண்டாகக நீ முயலவேண்டும். ஸ்திரீகளுள் அவள் ஒருவளே அவரது வீரியத்தைத் தாங்கும் தகுதி யுடையாளென்று பிரமதேவர் உபதேசித்திருக்கின்றார்.

இமயமலையின் தாழ்வரையில் தவம் புரியும் அச் சிவபிரானுக்குப் பார்வதி, தன் தகப்பனார் கட்டளைப்படி தொண்டு புரிவதாக அப்ஸரஸ்திரீகளின் வாயிலாக அறிந்திருக்கின்றேன். அந்த அரம்பையர் கூட்டம் என்னுடைய ஒற்றரில் உற்றது.

ஆகையால் நீ காரியம் கைகூடப் புறப்படுக. தேவர்களின் இக் காரியத்தை நீ நிறைவேற்றுக. இக்காரியம் பிறிதொரு காரணத்தால் ஆகவேண்டியதாயினும், விதையின் முளை, வெளி வருவதற்குமுன் நீரையே முக்கியகாரணமாக வேண்டிநிற்பது போல உன்னையே பிரதான காரணமாக நாடி நிற்கின்றது. (18)

தேவர்களின் வெற்றிக்குக் காரணமாகிய இந்தக் காரியத்தில் உனது அஸ்திரமொன்றுதான் செல்லும் வல்லமையுள்ளது. ஆகலின் நீயே பாக்கியசாலி. பிறரால் செய்யவேமுடியாத காரியமொன்றைச் செய்து முடிப்பவர்க்கு அக்காரியம் அவ்வளவு சிறந்ததல்லதாயினும் பெரும்புகழைப் பயக்குமல்லவா ?.

உன்னை வேண்டிக்கொள்பவர்களோ இதோ நிற்கும் தேவர்கள். காரியமோ உலகம் மூன்றனையும் சார்ந்தது. அது நிறைவேறுவதும் உனது வில்லினால். அதில் ஹிம்ஸையும் அதிகமில்லை. ஆ ஆ! யாவரும் கண்டு கொண்டாடும்படியல்லவா உனது வீரத்தன்மை விளங்குகின்றது. (20)

ஏ மன்மத, இங்கு நிற்கும் வஸந்தன் உனக்குத் தோழனாகையால், நான் அவனை ஏவாவிடினும் உன் காரியத்தில் அவன் உதவி செய்வான். "அக்கினிக்கு நீ துணைபுரியவேண்டும்" என்று காற்றிற்குக் கட்டளையிடுவாருமுண்டோ ?. (21)

மன்மதன் "அவ்வாறே" என்று பிரபுவான இந்திரனுடைய ஆஜ்ஞையை மாலையைப் போலச் [illegible]மேற்கொண்டு புறப்படலானான். இந்திரன் ஐராவதத்தைத் தட்டித் தட்டிக் கடினமுற்ற தனது கையினால் அந்தக் காமனது அங்கத்தைத்தடவிக் கொடுத்தான். (22)

---

22. " ஆஜ்ஞையை மாலையைப் போலச் சிரமேற்கொண்டு—இ
கு. 6

காமன், தனது அபிமானத்திற்குறிய தோழனான வஸந்தனும் ரதியும் பயத்துடன் பின் தொடர்ந்துவர, தன் உடம்பை ஒழித்தாவது ஏற்ற காரியத்தை முடிக்கவேண்டுமென்ற விருப்பமுள்ளவனாய், இமயமலையிலுள்ள சிவபிரானது ஆச்சிரமத்திற்கு வந்தான். (23)

வஸந்தன், அந்தத் தபோவனத்தில் ஐம்பொறிகளை அடக்கி வாழும் முனிவரது தவநிலையைக் குலைப்பவனாக, மன்மதன் செருக்கடையக் காரணமாயிருக்கும் தன் ஸ்வரூபத்தைக் கைக்கொண்டு மிகப் பரவி நின்றான். (24)

வெங்கதிரவன், வியவஸ்தையை மீறிக் குபேரன் ஆளும் திசையைத் தழுவத் தொடங்கவே, தக்ஷிணதிக்கு, தென்றல் என்ற வியாஜங் கொண்டு துயரத்தால் தன் முகத்திலிருந்து பெருமூச்சு எறிந்ததுபோலும். (25)

---

திரன் கொடுத்த மாலையையும் அவனது கட்டளையும் பெற்றுக்கொண்டு" என்றும் கருத்துக் கூறுவர்.

23. "பயத்துடன் பின் தொடர" என்பதை ரதிக்குமட்டும் நாதர் சேர்க்கின்றார். "ரதி பதிவ்ரதையாகையால் சிவபிரானின் மஹிமையை அறிந்து, தன் பர்த்தாவுக்கு ஏதாவது கெடுதி நேரிடலாமென்றும் அப்படி நேரிடக் கூடிய ஸமயத்தில் கணவனைப் பிரிந்து தான் தனித்திருக்கக் கூடாதென்றும் எண்ணி, பயத்துடன் பின் தொடர்கின்றாள்." என்ற கருத்தையும் அவரே எழுதுகின்றார். "அங்கவ்யயப்ரார்த்தித கார்யஸித்தி:" என்பது வடமொழி. "தன் அங்கமழிந்துபோவதற்காகவே இக்காரியத்தை மன்மதன் ஏற்றுக்கொண்டானென்று மஹாகவி பரிஹாஸமாக மன்மதனுக்கு அடைமொழி கொடுக்கின்றார்" என நாதர் எழுதுகின்றார்.

24. தன் ஸ்வரூபத்தைக் கைக்கொண்டு மிகப் பரவுதலாவது—ருது ஸ்வபாவத்தை ஏற்று, அக்காலத்தில் ஏற்படக்கூடிய பூத்தல்முதலிய விசேஷங்களை வெளிப்படுத்தலேயாம். இங்கு "முனிவரது தவநிலையை" என்றதால், வஸந்தனது காரியம் பரமசிவனிடம் பலிக்காது என்பது தொனிக்கின்றது" என்று விவரணகாரர் எழுதுகிறார்.

25. இடமொன வஸந்தன் தோன்றியதால் தக்ஷிணாயனம் மாறி உத்தராயணகாலம் வரவே, ஸூரியன் வடதிசை நோக்கிச் சென்றான். தென்றல் வீசத் தொடங்கிற்று. இக் கருத்தை நாயிகா நாயக பாவ கற்பனை மூலமாகக் காட்டுகின்றார். "ஸமயம்" என்ற வடசொல்லுக்கு, காலம்

அசோகமரம், திடீரென்று அடிமுதற்கொண்டே தளிர்களுடன் பூக்களைப் பெற்றது. அது, கட்டழகிகள் சிலம்பொலிக்கத் தரும் காலுதையை வேண்டவில்லை. (26)

வஸந்தன், தன் தோழனான மன்மதனுக்காகப் புதிய

---

பிரதிஜ்ஞை என இரு பொருள்களுண்டு. இவ்விரு பொருள்களையும் குறிப்பிடவே "வியவஸ்தையை மீறி" என்று மொழிபெயர்க்கப்பட்டது. "தக்ஷிண" என்ற வடமொழிக்கு, தெற்கு; தாக்ஷிண்ணியமுள்ளவள் என்ற இரு பொருள்களும் "முக" என்ற வடசொல்லுக்கு முகம், முன்பாகம் என்ற இருபொருள்களும் இங்குக்கொள்ளத்தக்கன. இங்கு ஸூரியன் நாயகனாகவும், தெற்குத் திசை கண்டித (கணவனால் அவமதிக்கப்பட்டவள்) நாயிகையாகவும், வடதிசை பரகீய (பிறருடைய) நாயிகையாகவும், தென்றல் துயரப் பெருமூச்சாகவும் திசையின் முன்பாகம் முகமாகவும் கூறப்படுகின்றன. ஸூரியன் வியவஸ்தையை மீறுவதாவது, இவ்வளவுகாலம் வரையில் தென்திசையிலிருக்கவேண்டுமென்ற காலவரையைக் கடத்தலாம். நாயக பக்ஷத்திலோ, "உன்னிற் பிரியேன்" என்று நாயிகைக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறுவதாம். "வெங்கதிரவன்" என்றதால் நாயகனது பொல்லாமையும், "தக்ஷிண" என்ற பதச் சிலேடையால் நாயிகையின் தாக்ஷிண்ணிய ஸ்வபாவமும் குறிப்பிடப்படுகின்றன. ஆதலால் தான் இந்த நாயிகை வசைமொழி கூறாமல் தனது துயரத்தை நினைத்துப் பெருமூச்சுமட்டும் விட்டுக்கொண்டிருப்பதாக வர்ணிக்கப் படுகிறாள். வஸந்தனையும் மன்மதனையும் கூறுமிடமாகையால் சிருங்கார ரஸத்தையே ஆங்காங்குப் புகவிட்டுப் பேசுகிறார் மஹா கவி. இவையெல்லாம் பார்வதியின் சிருங்காரசேஷ்டையிலும் பரமசிவனாது மனத் தளர்ச்சியிலும் பாய்ந்து முடிவுபெறும்.

26. அசோகமரம் புஷ்பிக்காதிருந்தால் கட்டழகியின் காலுதை அதனைப் பூக்க வைக்கும் உபாயமென்று கூறுவர். "குரவகம் ஸ்திரீகளுடைய ஆலிங்கனத்தாலும், மகிழம் முகமதுவாலும், ப்ரியங்கு தொடுதலாலும், மந்தாரம் பரிஹாஸவார்த்தையாலும், சம்பகம் சிரிப்பாலும் திலகம் பார்வையாலும், கர்ணிகாரம் ஆட்டத்தாலும், மா முகக் காற்றாலும், நமேரு பாட்டினாலும், அசோகம் காலுதையாலும் பூக்கின்றன" என்று பிரமாணமுண்டு. "அசோக......லலிதகாமி ஸாதாரணம்" என்று மாளவிகாக்னிமித்ரீயத்திலும், "ஏக: ஸக்யாஸ்தவ ஸஹ மயா வாமபாதாபிலாஷீ" என்று மேக ஸந்தேசத்திலும் கூறியபடி இங்கு ஊடலுக்கு இடங்கொடாமல் சோகமில்லாத சிறந்த நாயகனது செய்தியும் தொனிக்கின்றமையால் ஸமாஸோக்தி அலங்காரம்.

27. "வஸந்தன் என்ற கருமான்" என்று சொல்லாமையால் இங்கு

மாம்பூக்களாகும் கணைகளைச்செய்து முடித்து அவைகளின் இருபக்கங்களிலும் இளந் தளிர்களாகும் இறகுகளையும் அமைத்து, அக்கணைகளின்மீது பொறித்த மன்மதன் என்ற பெயரினுடைய எழுத்துக்களைப்போல வரிவண்டுகளை இருக்கச்செய்தான்.

கர்ணிகாரமலர்கள் சிறந்த நிறம் பெற்றிருந்தும் நறுமணமில்லாமையால் ரஸிகர்களது மனத்தை வருத்தின. ஆம். பிரமதேவரது பான்மையே, குணங்கள் யாவற்றையும் ஓரிடத்தில் ஒருங்குசேர்ப்பதில் பெரும்பாலும் விருப்பமுடையதன்று.

நன்கு விரியாமையால் இளம்பிறையைப் போல வளைந்தும், மிகச் சிவந்துமுள்ள பலாசமொட்டுக்கள், வஸந்தனோடு கலந்த வனபூமிகளுக்கு அப்பொழுது ஏற்பட்ட புதிய நகக்குறிகள்போல விளங்கின. (29)

வஸந்தலக்ஷ்மி, வண்டுகள் என்கிற அஞ்சனவரிகளை அமைத்து அழகுபடுத்திய தனது முகத்தில் திலகமலர் என்கிற பொட்டை இட்டு, இள வெயிலைப்போலச் செவ்விய செந்நிறம் என்கிற செம்பஞ்சுக்குழம்பால் மாந்தளிர் என்கிற உதட்டிற்குக் கோலஞ்செய்துகொண்டாள். (30)

---

ஏகதேசவுருவகம். பாணங்களில் பெயர்களைப் பொறிப்பது வழக்கு.

28. வாஸனையில்லையே என்று வருந்தும்படி அவ்வளவு அழகான நிறத்துடன் கர்ணிகாரம் மலர்ந்தது என்பது கருத்து. இக் கருத்தையே கையாண்டு மங்க கவி ஸ்ரீகண்டசரித மஹாகாவியத்தில் வர்ணித்து "கர்ணிகார மங்கன்" என்ற பிருது பெற்றதாகக் கூறுவர். கர்ணிகாரமென்பது கல்லியாண முருங்கை எனச் சொல்லுகிறார்கள்.

29. "நகக் குறிகள் போல" என்று உத்ப்ரேக்ஷை செய்தபடியால், வஸந்தன் நாயகன், வனபூமிகள் நாயிகைகள் என்பது தோன்றுகிறது. ஆகையால் இங்கு ஸமாஸோக்தி என்ற அலங்காரமுண்டு. நாயகன் தேசாந்தரமிருந்து திரும்பி வந்தால் நகக்குறிகள் அதிகம் காணக்கூடியன என்பது காமசாஸ்திரக் கொள்கை.

30. "லக்னத்விரேபாஞ்சனபக்திசித்ரே" என்பது வடசொல். அஞ்சனபக்தியாவது மையினால் கண்களுக்குத் தீட்டும் கோடுகளென்பர்; கன்னங்களில் மையினால் எழுதிய மகரிகாதி பத்திரங்கள் எனச் சிலரது உரை. "லக்ன.....சித்ரம்" என்ற பாடத்தை ஏற்று, இதனை "திலகம்" என்பதற்கு அடைமொழியாக மல்லிநாதர் வியாக்கியானிக்கின்றார். இங்கு "வஸந்த லக்ஷ்மி என்கிற நாயிகை" எனத் தோன்று

மான்கள், முளைஞ்செடிகளின் பூங்கொத்துப் பொடிகள் கண்களில் விழப் பார்வை மறைந்தவைகளாய், "மர்மர" என்ற ஒலியுடன் இலைகள் உதிரும் கானகந்தன்னில் மதம் மேலிடக் காற்றுக்கெதிராக ஓடிச் சென்றன. (31)

ஆண் குயில், மாவின் அரும்புகளைத் தின்று, இனிய குரலில் கூவிற்று. அக் கூவல், கணவரிடம் ஊடலேற்ற காமினிகளுக்குக் கோபத்தை விடும்படி மன்மதனிட்ட கட்டளையாயிருந்தது. (32)

பனி நீங்கியதால் உதடுகள் வெளுத்தும், முகங்கள் வெள்ளொளி வீசியும் விளங்கும் கின்னரப் பெண்களுடைய மகரிகாதி பத்திரங்களிலும் பொட்டுக்களிலும் வியர்வை கிளம்பத் தொடங்கிற்று. (33)

சிவபிரானது தபோவனத்தில் வாழும் தவத்தினர், அங்கு அக்காலத்தில் திடீரென வஸந்தன் தோன்றியதைக் கண்டு

---

வதால் அணி ஏகதேச வுருவகம். கீழ்ச் செய்யுளில் கூறிய வனபூமிகளாகிய இங்கும் சேர்த்து, வஸந்தலக்ஷ்மி என்னும் தோழி வனபூமிகள் என்னும் நாயிகைகளுக்கு இவ்வாறு அலங்காரம் செய்தாளெனக் கொள்ளலுமாம். நாயகனோடு கலந்த நாயிகையின் அஞ்சனம் அழிவதும், பொட்டுப் பெயர்ந்து விழுவதும், அதரத்திலுள்ள சிவப்பு மாறுவதும், மறுபடியும் இவைகளைப் புதுக்குவதும் வர்ணிக்கப்படுகின்றனவன்றோ.

31. மதமேலீட்டால் தகாத வழி சென்றவனுக்குக் கண்கெடுவதுதான் பயன் என்பது தொனிப்பொருள்.

33. "விசதாதராணாம்" என்று மூலத்திலிருக்கின்றது. விசத பதத்திற்கு "வெளுத்த" என்ற பொருளுண்டு. "பனிக் காலத்தில் உஷ்ணத்திற்காக அதரத்தில் செம்பஞ்சுக் குழம்பையும் கன்னங்களில் குங்குமத்தையும் பூசுவதுண்டு. இப்பொழுது பனி நீங்க, அவ்வாறு செய்யாமையால் அதரமும் முகமும் வெளுத்து விளங்குகின்றன" என்று நாதர் எழுதுகின்றார். பனிக்காலத்தில் உதடு வெடிக்கும், முகம் கருகும். அவ்வாறின்றி இப்போது விளங்கின எனக் கொள்ளலுமாம். உடம்பின் மீது ஏதாவது பூசியிருந்தால் அவ்விடங்களில்தான் முதன் முதல் வியர்வை உண்டாவது இயற்கை. மகரிகாதி பத்திரங்களைத் "தொய்யில்" எனத் தமிழ்க் காவியங்கள் கூறுகின்றன. "பச்சிலைக் கீற்று" என்பது உலகவழக்கு.

தங்களது மனம் விகாரமுறாதபடி பெரிதும் முயன்று ஒரு வாறு அதனை அடக்கித் தம் வயப்படுத்தினர். (34)

மன்மதன், பூவில்லினைத் தனது தோளிலேற்றிக்கொண்டு ரதியுடன் அந்த இடத்திற்கு வரவே, அங்குள்ள மிதுனங்கள் யாவற்றும் ஸ்நேஹரஸம் பெருகித் ததும்பும் உள்ள நெகிழ்ச்சி யைத் தங்களுடைய செய்கைகளால் வெளியிடத் தொடங்கின.

ஓர் ஆண் வண்டு, தன் பெண்டினைப் பின்பற்றிக்கொ ண்டு, பூ என்னும் ஒரே பாத்திரத்தில் மதுவை அருந்திற்று. கலைமான் ஒன்று, தன் காதலியின் கண்கள் ஆனந்தத்தால் குவி யுமாறு அப்பேடின்மீது சாய்ந்துகொண்டு தனது கொம்பினால் அதன் தினவு தீர உராய்ந்தது. (36)

ஒரு பெண் யானை, தாமரை மலர்ப்பொடி படிந்து நறு மணம் கமழும் வாவிநீரை முன்னர் தான் உறிஞ்சிப் பின்னர் அந்நீரையே தனது வாயிலிருந்து தும்பிக்கைவழியாகத் தலை வனுக்கு அன்புடன் அளித்தது. சக்ரவாகபக்ஷியொன்று ஒரு தாமரைத் தண்டில் பாதிப்பாகத்தைத் தான் தின்றுவிட்டு, மி குந்த பாதிப்பாகத்தைத் தனது பெண்டுக்குக் கொடுத்து அத னைப் பாராட்டிற்று. (37)

கன்னங்களில் எழுதிய தொய்யில்கள் நனைந்து சிறிது பருக்குமாறு களைப்பினால் வியர்வைத்துளிகள் பரவியும், பூமது வைப் பருகியதால் கண்கள் சுழன்றும் விளங்கும் காதலியின் முகத்தில், கின்னரனொருவன், அவள் ஒவ்வொரு பாட்டுப்பாடி நிறுத்தியபொழுதும் முத்தமிட்டான். (38)

---

35. மிதுனங்கள்—ஆணும் பெண்ணும். யாவற்றுமென்பது ஜங் கமங்களையும் ஸ்தாவரங்களையும் குறிப்பிடுகின்றது. இதனை மேல் வர் ணனையிற் காணலாம். ஸ்தாயிபாவமான ரதியும் அதன் பரிபோஷ மான காமனும் சேர்ந்தால் ரஸம் பிறக்கத் தடை கிடையாதன்றோ.

36. மது—மத்தியம், தேன். மான்களைப் பற்றிப் பேசுவதில் காளிதாஸருக்குப் பெருநோக்குண்டு. "ச்ருங்கே க்ருஷ்ணம்ருகஸ்ய வாம நயநம் கண்டூயமானும் ம்ருகீம்" என்று சாகுந்தளம். மான் கொம் பினால் உராய்வது கலவி விருப்பத்திற்கு ஸூசனையாம்.

மலர்க்கொத்துக்கள் என்ற மார்பகங்களும், மணங்கமழும் தளிர்கள் என்ற உதடுகளும் அமைந்து அழகுற்ற கொடிகள் என்ற கோதையர், மரங்களைத் துவண்ட தம் கிளைகள் என்ற கைகளால் கட்டியணைத்தனர். (39)

அந்நேரத்தில் சிவபிரானார், அப்ஸரப் பெண்களுடைய துதிப் பாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்தாராயினும், ஆத்மத் தியானத்திலேயே ஒருப்பட்டிருந்தார். மனத்தைத் தம் வசப் படுத்தியிருப்பாரது ஸமாதிநிலையைக் குலைக்க இடையூறுகளால் ஒருகாலுமியலாதன்றோ. (40)

பிறகு நந்தீச்வரர், சிவபிரான் வாழும் கொடிவீட்டின் வாயிலில் வந்து நின்று, தங்கப் பிரம்பினைத் தனது இடக்கை யில் தாங்கிக் கொண்டு, முகத்தில் கைவிரலொன்றை வைத்து அக் குறிப்பினால் "சேஷ்டை செய்யாதீர்கள்" என்று ப்ரமத கணங்களை உணர்த்தினார். (41)

நந்தி இவ்வாறு கட்டளை பிறப்பித்தவுடன், மரங்கள் அசையவில்லை; வண்டுகள் முரலவில்லை; பறவைகள் கூவவில்லை.

---

39. இங்கு ஸ்தாவர மிதுனம் பேசப்படுகின்றது. "மரங்கள் என்ற நாயகர்களை" எனத் தோன்றுவதால் ஏகதேச வுருவகம். இங்கு ஸ்வேதஜம், அண்டஜம், உத்பிஜ்ஜம், ஜராயுஜம் என்று நான்கு வகை யுள்ள ஜீவராசிகளுடைய மிதுனங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றமை யை உய்த்துணர்க. இதன் விரிவை நாற்பத்திரண்டாம் சுலோகத்தில் காட்டுவோம்.

40. மற்றைத் தேவர்களைப் போல அப்ஸரஸ்திரீகளும் பகவானை அடிபணிய வந்திருக்கின்றனரெனக் கொள்க. பகவான், அவர்களு டைய பாடல்களைக் கேட்பதும், அவர்களுக்கு அருள் புரிவதற்காகவே என்பது நாதரினுரை. மன்மதன் வந்தால், முன்பு கைக்கொண்ட தியான நிலையும் குலையவேண்டியிருக்க, மாறாகப் பரமசிவனாரது மனம் அப்பொழுது தான் தியானத்திலீடுபடத் தொடங்கிற்று எனச் சொல்லி அப்பெருமானது பெருமையை விளக்குகின்றார் மஹாகவி.

41. மூக்கு நுனியில் சுட்டு விரலை வைத்து, பரமசிவனார் தவத்தி லிருப்பதால் அதற்கு இடையூறாக ஓடியாடித் திரிந்து கோலாஹலம் செய்யாதீர்கள் என்று குறிப்பிட்டார்.

42. இங்கு முறையே உத்பிஜ்ஜாதி ஜீவராசிகள் குறிப்பிடப்பட் டன என்பர். உத்பிஜ்ஜமாவது—விதையிலிருந்து பூமியைப் பிள

விலங்குகள் ஓடித் திரியவில்லை. அப்பொழுது காடு முழுவது மே சித்திரத்திலெழுதப் பெற்றதுபோலிருந்தது. (42)

பயணம் புறப்படுவோன், சுக்கிரன் எதிரிலிருந்தால் அத்திசைவழி செல்லாமல் விலகிப்போவதுபோல, மன்மதன் அந்தப் பரமசிவனது பார்வைக்கு எதிராகப் போகாமல் விலகிப் போய், ஓரங்களில் நமேரு மரக்கிளைகள் ஒன்றோடொன்று பிணைந்து விளங்கும் அந்தப் பெருமானது தபோவனத்தினுட் புகுந்தான். (43)

அங்கு ஒரு தேவதாரு மரத்தின் கீழுள்ள மேடையில் புலித்தோலொன்றை விரித்து அதன்மீதிருந்து ஐம்பொறிகளையும் அடக்கித் தியானத்திலிருக்கும் முக்கண்ணப் பெருமானை உடலழிவு அடுத்திருக்கின்ற காமன் கண்ணுற்றான். (44)

அப்பொழுது அந்தப் பரமசிவனார், வீராஸனத்திலமர்ந்திருந்தமையால் அவரது சரீரத்தின் கீழ்ப்பாகம் நிலைத்தும், மேற்பாகம் நிமிர்ந்து நீண்டும் இருந்தன. இங்குத் தாமரைப்பூ,

---

கொண்டு மேலெழும் மரம் செடி கொடிமுதலியது. ஸ்வேதஜமாவது—வியர்வையிலிருந்து உண்டாகும் ஈ வண்டு முதலியது. அண்டஜமாவது—முட்டையிலிருந்து வெளிப்படும் பறவை முதலியது. ஜராயுஜமாவது—கர்ப்பப்பையிலிருந்து பிறக்கும் விலங்கினம் முதலியது. அசையாப் பொருளை "சித்திரத்திலெழுதியது போல" என்று கூறுவது காளிதாஸரது வழக்கம்.

43. சுக்ரன் எதிராயுள்ள திக்கில் பயணம் போகலாகாது என்பது ஜ்யோதிச் சாஸ்திரக்கொள்கை. நமேரு அடர்ந்திருப்பது மன்மதன் ஒளிந்து கொள்ள அனுகூலமாம்.

44 "ஆஸந்ந சரீரபாதஸ்த்ரியம்பகம் ஸம்யமினம் ததர்ச" என்பது மூலம். இந்தப் பதச் சேர்க்கை வெகு அழகாயுள்ளது. மன்மதனுக்கு அழிவு அடுத்திருப்பதால்தான் தவத்திலுள்ளவருக்குக் கோபத்தை மூட்டினான். அவனுக்கு அவ்வழிவும் முக்கண்ணருடைய மூன்றாம் கண்ணால்தான் என்பது இங்குப் பெறப்படும். இது முதல் இந்த ஸர்க்கம் முடிவுக்குள் பரமசிவனாரை "முக்கண்ணர்" என்றே பலதடவைகளிலும் மஹாகவி குறிப்பிடுவதையும் உய்த்துணர்க. தேஹாவஸாந காலத்தில் பகவானை நேரில்கண்ட மன்மதனது பாக்கியமே பாக்கியம் என்று மஹாகவி கொண்டாடுகிறார் என்று ஒரு ரஸிகர் அபிப்ராயப்படுகிறார்.

45. மூலத்திலுள்ள "பூர்வகாய" பதத்தைக் கீழ்ப்பாகமென்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர். வீராஸனமாவது-வலதுகாலை இடத்தொ

பூ மலர்ந்து விளங்குகின்றதோ என்று பார்ப்பவர் நினைக்கும்படி அவர் தமது தோள்கள் குழைய இரு கைகளையும் மடியில் உட்புறம் மேலாகுமாறு (மல்லாந்து) ஒன்றன்மீதொன்றாக வைத்திருந்தார். (45)

அவர் தமது சடை முடியை உயரத்தூக்கிப் பாம்பைக் கொண்டு கட்டியும், அக்ஷமாலையை இருவடமாகக் காதில் மாட்டியும், கழுத்தின் ஒளி பரவி நன்கு கருத்த மான்தோலொன்றை முடியிட்டுத் தரித்துமிருந்தார். (46)

அவர் தம் மூன்று கண்களுக்கும், அவைகளது ஒளி கீழ் நோக்கிச் செல்லத் தமது மூக்கின் நுனியைக் குறியாக்கியிருந்தார். அந்தக் கண்களுடைய கருவிழிகளோ, பிரகாசங் குறைந்தனவும் அசைவற்றனவும் அச்சுறுத்துவனவுமாயிருந்தன. புருவங்களும், இமைகளிலுள்ள உரோமவரிசைகளும் சற்றும் அசையவில்லை. (47)

அவர், பிராணாதி வாயுக்களை உள்ளில் அடக்கியிருந்தமையால், மழை முழக்கமில்லாத மேகம்போலவும், அலை கிளம்பிக் குதிக்காத ஆழிபோலவும், காற்றில்லாதவிடத்தில் அசையாதிருக்கும் விளக்குப் போலவும் விளங்கினார். (48)

அவரது தலையிலிருந்து சோதியொன்று கிளம்பி மண்டையோட்டிலுள்ள கண்குழிகள் வழியாக வெளிவந்து, தாமரைத்

---

டையில் வைத்து, இடதுகாலில் வலத்தொடையை வைத்திருப்பதாம்.

47. இந்த நிலை பார்வதியின் தவத்திலும் குறிப்பிடப்படுகின்றது. இதனை ஐந்தாம் ஸர்க்கம் இருபத்துநான்காம் செய்யுளில் விரித்து உரைப்போம்.

48. மூன்று உவமைகளாலும் முறையே காற்று, கீழ் மேல் குறுக்காகப் போகாமை தெரிவிக்கப்படுகின்றது என நாதர் கூறுகின்றார். "முதலுவமையால் பிராணவாயுவை அடக்கியதும், இரண்டாம் உவமையால் அபானவாயுவை அடக்கியதும், மூன்றாம் உவமையால் மற்றைவாயுக்களை அடக்கியதும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன" என்பது மல்லிநாதர் கருத்து.

49. யோகிகள் "குண்டலினீ" என்றும், "ஆக்னேயமண்டலம்" என்றும் கூறப்படும் ஆத்மதேஜஸ்ஸை மூலாதாரத்திலிருந்து கிளப்புவார்கள் என்பது யோகசாஸ்திர ஸித்தாந்தம். அந்தச்சோதி தலையிலுள்ள

தண்டு நூலினும் மெல்லிய இளந் திங்களுடைய கிரணங்களை வாட்டி வருத்திக்கொண்டிருந்தது. (49)

அவர் தம் மனம் வெளிப்போகாவண்ணம் ஒன்பது வாயில்களையும் அடைத்து, அதனை ஸமாதியால் தம் வசப்படுத்தி ஹிருதயஸ்தானத்தில் இருத்திவைத்து, க்ஷேத்திரமறிந்தவர்களால் "அழிவற்றவன்" எனக் கொள்ளப்படும் தம்மையே தம்மில் கண்டுகொண்டிருந்தார். (50)

அவ்வாறுள்ள முக்கட்பெருமானை மன்மதன் சிறிது தூரத்திலிருந்து கண்ணுற்று, "இவரை ஆட்படுத்த மனத்தால் நினைக்கவும் முடியாது" என்ற எண்ணங்கொண்டான். அப்பொழுது தனது சரீரம் பயத்தால் தளர்ந்து நடுங்க, அவன், தனது கையிலிருந்து அம்பும் வில்லும் நழுவியதையும் அறிந்தானில்லை.

அந்தத் தேவி, பதுமராகங்களைப் பழிக்கும் அசோகமலர்கள், ஸுவர்ணத்தின் ஒளியை இகழும் கர்ணிகாரகுஸுமங்கள், முத்துமாலையை ஒத்த ஸிந்துவாரபுஷ்பங்கள் என்ற வஸந்தகாலப் பூக்களையே தனக்கு ஆபரணங்களாக அணிந்திருந்தாள்.

---

பிரமரந்திரம் வழியாக வெளிப்படும். இங்கு மண்டையோடு பிரமதேவருடையது.

50. க்ஷேத்திரம்=சரீரம். க்ஷேத்திரம் அறிந்தவர்கள்— க்ஷேத்திரம் என்ற சரீரத்தையும், க்ஷேத்திரஜ்ஞன் என்ற ஜீவாத்மாவையும் பகுத்தறிந்தவர்கள். மூலத்திலுள்ள "ஸமாதிவச்யம்" என்பதைப் பரமாத்மாவுக்கு விசேஷணமாகச் சிலர் கூறுவர். யோகிகள் அவ்வாறுள்ள பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிப்பார்கள். இங்குப் பரமசிவனாரே பரமாத்மாவாகையால் "தம்மைத் தாமே ஸாக்ஷாத்கரிக்கின்றார்" எனக் கூறப்படுகிறது.

இங்கு யமநியமாதிகளான யோகத்தின் அங்கங்கள் எட்டும் ஆங்காங்குக் குறிப்பிடப்பட்டிருக்கின்றமையைக் கண்டு கொள்க.

"யோகநிலைமையிலுள்ள பரம பரிசுத்தமான பரமேச்வரஸ்வரூபத்தை நமது மஹாகவி தமது வர்ணனைத் திறமையால் நம் எதிரில் நிறுத்துகின்றார். ப்ரவ்ருத்தி மார்க்கத்திலுள்ளவர்களும் காவிய ரஸத்தால் இதனைப் படிக்கும்பொழுது அன்னவர்களுடைய ஸம்ஸாரபந்தம் நீங்கக்கூடுமே என்பது கருணைநிறைந்த கவியின் கருத்தாம். இவ்வாறே பார்வதிவர்ணனையிலும் கொள்ளவேண்டும்." என்று அருணகிரிநாதர் உள்ளுருகி எழுதுகின்றார்.

மலையரசன் மகளாகிய பார்வதி தேவி, பெரும்பாகம் அவிந்துபோன மன்மதனது சௌரியத்தை மீண்டும் மூண்டெரியச் செய்பவள் போல, இரு வனதேவதைகள் பின்தொடர, அங்கு வருவதை அவன் கண்டான். [53)

தளிர்கள் நிறைந்து, நன்கு அமைந்த இரு பூங்கொத்துக்கள் காரணமாகச் சிறிது சரிந்து விளங்கும் கொடியொன்று நடந்துவருகின்றதோ என்று தோன்றுமாறு, அந்தத் தேவி, காலைக் கதிரவனையொப்பச் செவ்விய ஆடையை உடுத்துக் கொங்கைகள் மூலமாகச் சற்று வணங்கி நடந்துவருவாளாயினள்.(54)

அந்தத் தேவி, தான் மேகலையாகச் சார்த்திய முகிழும் பூமாலையொன்று அடிக்கடி நிதம்பத்திலிருந்து நழுவ, அதனை மேலேற்றிக்கொண்டு வருகின்றாள். அம்மாலையோ, மன்மதன் தக்க இடமறிந்து வைப்புப்பொருளாக வைத்த அவனது இரண்டாம் நாண்கயிறுபோல விளங்கியது. (55)

அந்தத் தேவி, அவளது மூச்சுக் காற்றின் வாஸனையில்

52. பரமசிவனுக்குப் பார்வதியிடம் அனுராகம் உதிப்பதற்குரிய விசேஷங்களை நான்கு செய்யுட்களால் கவி எடுத்துக் காட்டுகின்றார். ஒரு பூ சிவப்பாயும், மற்றொன்று மஞ்சளாயும், பிறிதொன்று வெளுப்பாயுமுள்ளன. இவைகளது சேர்க்கையே வெகு அழகாம். இவளும் ஒரு வனதேவதையோ என்று தோன்றுமாறு மன்மத பாணங்களான புஷ்பங்களை ஏற்றுக்கொண்டு வருகின்றாள் போலும்.

53. இங்கு வனதேவதைகள் விஜயை, மாலினி ஆகிய இரு தோழிகளே.

54. "நடக்கும் கொடிபோல" "நடக்கும் சுடரொளிபோல" என்பதைப்போன்ற உத்ப்ரேக்ஷைகள் நம் கவிராயர் கருத்திற்கிசைந்தவைகளாம். "சிவந்த ஆடையும், ஒலிக்கின்ற ஆபரணமும் காதலை வளர்த்தும்" எனக் காமசாஸ்திரம் கூறும்.

55. பார்வதியின் நிதம்பத்திலுள்ள வகுளமாலையை மன்மதனது நாண்கயிறு என உத்ப்ரேக்ஷித்திருப்பது மிகுபொருத்தமுடையதாம். உடம்பெங்கும் மலரணிகள் பூண்ட பார்வதி மன்மதனது வில்லைப் போலவிளங்கினால், இடையிலுள்ள இம்மாலை அவ்வில்லிற்குக் குணமாக(நாணாக) வேண்டியது தானன்றோ.

56. பார்வதியின் அப்போதைய நிலைமையை வர்ணித்து, மஹாகவி, அவளைப் பரமசிவனார் கண்ணுக்குப் புதிய ஒரு பார்வதியாக்கிவி

ஆசைகொண்டு கோவைப் பழம்போன்ற அதரத்தினருகு வந்து வண்டொன்று வட்டமிட, அச்சங்கொண்டு மருள விழித்துத் தன் கையில் விலாஸமாக வைத்திருக்கும் தாமரைப்பூவால் கொடிதோறும் அதனை ஓட்டிக்கொண்டிருந்தாள். (56)

பூவில்லான், ரதியும் கண்டு நாணும்படி ஓர் உறுப்பிலும் ஒரு குற்றமுமில்லாத அந்தத் தேவியைக் கண்டதும், ஐம்பொறிகளையுமடக்கி வாழும் சூலம் தாங்கிய சிவபிரானிடம் தனது காரியம் நிறைவேறக்கூடும் என்று மறுபடியும் கருதலானான்.

உமையாளும், கணவராக வரவிருக்கும் சம்புவின் ஆச்சிரமவாயிலில் வந்து நின்றாள். சிவபிரானும் பரமாத்மாவாகும் பெருஞ் சோதியைத் தம்மகத்துக் கண்ணுற்று, பிறகு தியானத்திலிருந்து ஒழிவடைந்தார். (58)

---

ட்டார். "சலாபாங்காம்...க்ருதி" என்று சாகுந்தளத்திலுள்ள வண்டின் வர்ணனை இங்கு நினைக்கற்பாலது. நமது கவிச்சக்கரவர்த்தியார், தமது கவிதைக் கண்ணுற்கண்ட பார்வதியின் உருவச் சிறப்பையும், அலங்காரவிசேஷத்தையும் தமது வர்ணனைத்திறமையால் ரஸிகர்களது அகக்கண்ணுக்கு நேரில் புலப்படும்படி செய்திருப்பதால், அலங்காரம் பாவிகமாம்.

"ஐம்பத்திரண்டாம் செய்யுளில், பார்வதி வருவதை மன்மதன் கண்டான் எனக் கூறப்பட்டது. அவள் சிறிது தூரத்தில் வரும்போதே மன்மதன் காணக்கூடிய பூவணியை அடுத்த செய்யுளாலும், இன்னும் அடுத்து வரும்போது புலனாகக்கூடிய அவயவங்களை அதற்கடுத்த செய்யுளாலும், மேலும் நெருங்கும்பொழுது காணக்கூடிய அரையிலுள்ள சிறுமாலையையும் இவளது செய்கையொன்றையும் அதற்கடுத்த செய்யுளாலும், நன்கு அடுத்த பிறகே நன்றாகக் காணக்கூடிய கண் மருள்வது போன்ற செய்கைகளை அதற்கடுத்த செய்யுளாலும் மஹாகவி வர்ணித்திருக்கின்றார்." எனக் கொள்க.

57. "பூவில்லான்" என்பதற்கும், "சூலம் தாங்கிய" என்பதற்கும் பத்தாம் செய்யுளிற் கூறிய கருத்தையே கொள்க.

58. "பவிஷ்யத: பத்யுருமா ச சம்போ:" என்பது மூலம். "உமை என்ற பதத்தின் பொருளைக் கவியே கூறியிருக்கின்றார். சம்பு என்றால் உலகத்திற்கு ஸுகத்தை உண்டாக்குகிறவர் என்பது பொருள். இந்தப் பார்வதி "உமை" என்ற பெயர் பெற்ற பிறகு தான் சிவனார் கணவராகப் போகின்றார். அதன் பின்பு தான் உலகத்திற்கே ஸுகம் பிறக்கப் போகின்றது. என வரும் காரியத்தை இங்குள்ள பதச் சேர்க்கை தொனிப்பிக்கின்றது.

பரமசிவனார், உறுதியாயிட்டிருந்த வீராஸனத்தைக் கலைத்து, அதுவரை அடக்கிவைத்திருந்த பிராணன் முதலிய வாயுக்களைச் சிறிது சிறிதாய் வெளியிடலானார். அப்பொழுது ஆதிசேஷன், தன்னுடைய படங்கள் யாவற்றையும் உபயோகித்து, அப்பெருமானிருக்குமிடத்தை மிகு பிரயாஸத்துடன் அடியில் தாங்கிநின்றான். (59)

நந்தீசுவரர், பரமசிவனாரிடம் அடுத்துச் சென்று அடிபணிந்து, பணிவிடை புரியப் பார்வதி வந்திருப்பதாகப் பகர்ந்தார். பின்னர், சிவபெருமான், புருவத்தை அசைத்து "உள்ளே விடலாம்" என்று குறிப்பாலுணர்த்த, நந்தி அந்தத் தேவியை உள்ளே போகவிட்டார். (60)

உட்புகுந்த பிறகு பார்வதியினுடைய இரு தோழிகளும் அந்தப் பகவானை அடிதொழுது, தம் கைகளால் பறித்த வஸந்தகாலத்துப் பூக்களைத் தளிர்களுடன் அவருடைய திருவடிகளில் முன்பு ஸமர்ப்பித்தனர். (61)

பின்பு உமையாளும், தனது கற்றைக் கருங்குழலிடையில் செருகிய கர்ணிகார மலரும், காதின்மீது அணிந்திருந்த தளிரும் நழுவித் தரையில் விழுமாறு தலைவணங்கி அப்பகவானுக்குத் தண்டனிட்டாள். (62)

---

இவள் ஆச்சிரமவாயிலிற் சென்றதும், மன்மதன் வரும்போது தொடங்கிய தியானம் நின்றுவிட்டதாகக் கூறி, மஹாகவி, முதல் ஸர்க்கத்தில் நாற்பதாம் செய்யுளிற்கூறிய கருத்தை நினைவுக்குக்கொண்டு வருகிறார்.

59. அடக்கிய வாயுவை வெளியிடும்பொழுது, சிவனாரது தேகம் கனத்தது என்பது கருத்து.

61. பார்வதி முன்னர்வாராமல் முதலில் தோழிகள் வந்து பூசை செய்தது, அவளுடைய அச்சத்தையும் நாணத்தையும் அறிவிக்கின்றது. "ஈசுவரனது கருத்தை அறிய இவ்வாறு தோழிகள் செய்தனர்" எனத் தக்ஷிணாவர்த்தர் கருத்துக் கூறுகின்றார்.

62. உமையின் கூந்தலிலுள்ள கர்ணிகாரமும் காதிலுள்ள தளிரும் நழுவி விழுந்தனவாக வர்ணித்திருப்பது, தன் தோழிகளைப் போல இவளும் முக்கண்ணரது பாதமூலத்தில் தளிருடன் பூவை ஸமர்ப்பித்தனள் எனத் தோற்றுதற்காகவோ?. தோழிகள் முன்பு நமஸ்கரித்து விட்டுப் பிறகு அவ்வாறு ஸமர்ப்பித்தனர்; இவளோ அவைகளை ஸமர்ப்பித்துக்கொண்டே நமஸ்கரிக்கின்றாள் என்பதும் தோன்றும். மன்ம

பரமசிவனார் அவளை நோக்கி "வேறு மனைவியில்லாக் கணவனைப் பெறுவாயாக" என்று மெய்யாகவே முடியும் ஆசியை அருளினார். பெரியாருடைய வாக்கு, உலகில் ஒருகாலும் பொய்த்துப் போகக் கூடியதன்றன்றோ. (63)

மன்மதனோ, விட்டிற்பூச்சியை யொப்பத் தீவாயில் விழத்துணிந்து அரனாரையே குறியாக நோக்கி அம்பு எய்தற்குரிய காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு, உமையின் எதிரில் தனது வில்லிற் பூட்டிய நாண்கயிற்றினை அடிக்கடி உருவிக்கொண்டிருந்தான். (64)

பின்பு பார்வதி, கங்கையிலிருந்து தாமரை விதைகளைக் கொணர்ந்து வெயிலில் உலர்த்திக் கோத்து வைத்திருந்த மாலையை, தவத்தவரான அப்பெருமானாருக்குச் செவ்விய தன் கையால் கையுறையாக வழங்கினாள். (65)

முக்கண்ணனாரும், அன்பரிடம் ஆதரமுள்ளவராதலின் அம்மாலையைப் பெற்றுக் கொள்ளத் தொடங்கினார். பூவில்லானும், வீணாகாத "ஸம்மோஹனம்" என்ற அம்பைத் தனது வில்லில் தொடுத்தான். (66)

---

தன் விடப் போகும் அம்பு பயன்படாமல் போனாலும், அதனை இவள் வாங்கி உபயோகித்துப் பயன்படச் செய்கின்றாள்போலும்.

63. "பவ்யமேவ" என்ற பாடத்தில் "வாய்போகும்" என்பது பொருள். முதல் ஸர்க்கத்திலுள்ள நாரதாது வாக்கியம் இங்கு நினைக்கத் தக்கது.

64. மன்மதன் தீவாயில் விழுவதாவது— தீவாயில் விழுவதைப் போன்ற ஸாஹஸமான காரியத்தைச் செய்வதேயாம். உண்மையும் இதுதானன்றோ. "இன்னமும் இவர்க்குப் பரிசயம் வளர அப்போது அம்பு எய்யலாமென்று காலம் பார்த்திருக்கின்றான் மன்மதன்" என்றும், "பார்வதிக்கு உத்ஸாஹத்தை உண்டாக்கவே அவனுக்குப் புலப்படுமாறு செய்தான்." என்றும் நாதர் எழுதுகின்றார். உலகத்தை ஸம்ஹரிப்பவராகையால், "ஹரன்" என்ற பெயர் பெற்ற சிவபிரானிடம் மன்மதன் இவ்வாறு நடக்கலாமா என்று மஹாகவி அவனிடம் தமது இரக்கத்தையும் கோபத்தையும் காட்டுகின்றார்.

66. உன்மாதனம், தாபநம், சோஷணம், ஸ்தம்பநம், ஸம்மோஹனம் என்று ஐந்து பாணங்கள் மன்மதனுக்கு உண்டு. ஸம்மோஹன பாணம், தாமரைப்பூ என்று சிலரும், கருங்குவளை என்று வேறுசிலரும் கூறுவர்.

அரனாரோ, திங்களெழுத்தொடங்கும்பொழுதுள்ள கடலைப் போல உறுதிநிலையைச் சிறிதளவு கைவிட்டு, கோவைப் பழம் போன்ற அதரம் அமைந்த உமையின் முகத்துத் தமது மூன்று கண்களையும் செலுத்தினார். (67).

மலைமகளும், அரும்பி விளங்கும் சிறு நீபமரத்திற் கொப்பான (மயிர் சிலிர்ப்புற்ற) அவயவங்களால் தனது உள்ள நெகிழ்ச்சியை உணர்த்திக் கொண்டு, தன்பார்வையை மடக்கி, முகத்தை அழகு பெறக் குறுக்காகச் சாய்த்துநின்றாள். (68)

முக்கண்ணனார், பொறிகளை அடக்கியாளும் வல்லமை வாய்ந்தவராதலால், அப்பொழுது நிகழ்ந்த அவைகளது புரட்சியை மறுபடியும் அடியோடு அடக்கித், தம் மனத்தின் மாறுபாட்டிற்குக் காரணம் யாது என்பதைக் காணக் கருதி, திசைமுகங்களைப் பார்வையிட்டார். (69)

அவர், அப்பொழுது, இடக்காலை மடக்கித் தோள்கள் சரியத் தன் வில் வட்டமாய் வளையுமாறு அதனது நாண் கயிற்றை வலக் கண் ஓரம் வரையில் இழுத்துப் பிடித்துக் கொண்டு அம்பு எய்ய ஒருப்பட்ட தான்தோன்றியைக் (காமனை) கண்ணுற்றார். (70)

---

67. கண்கள் என்ற பன்மையால் மூன்று கண்களையும் செலுத்தினார் என்பது தெரிகிறது. மூன்றும் கண்ணும். வேண்டியவிடத்தில் குளிர்ந்தே இருக்குமன்றோ.

68. மலைமகளும்(சைலாத்மஜாபி)என்றதால், கல்லைப்போல மனமறியாமலிருந்தாலும், மன்மதன் சிருங்கார சேஷ்டைகளைச் சடக்கெனக் கற்பித்து விடுகிறான் என்பது அறியக் கிடக்கின்றது. "பர்யஸ்தவிலோசனேன" என்பது மூலம். "கண்கள் சுழல" என்பது மல்லிநாதரின் உரை. "ப்ரதிநயனநிபாதே கிஞ்சிதாகுஞ்சிதாணும்" என்று பவபூதி கூறியபடி, பார்வதி, தனது பார்வையும் பரமசிவனது பார்வையும் ஒன்று சேர அப்பொழுது வெட்கத்தால் தன் பார்வையை இழுத்துக் கொள்கிறாள் எனப் பொருள் கூறுவது தக்கதாம்.

70. ஐந்து வகைத்தான வில்லாளியின் நிற்பில் இங்கு "ஆலீடம்" என்ற ஸ்தானம் (நிற்பு) பேசப்பட்டது. வலதுகாலை முன்வைத்து இடதுகாலை மடக்கிச் சிறிது பின்வைத்து நிற்பது ஆலீடமாம்.

மன்மதன் தவத்தைக் கெடுக்கவல்லவா வந்தானென்று அரனார்க்குக் கோபம் பொங்க, அவரது முகம் புருவங்களை நெறித்துக் காணமுடியாதபடி பயங்கரமாயிருக்க, அப்பொழுது அவரது மூன்றாம் கண்ணிலிருந்து நெருப்பு, கொழுந்து விட்டெரிந்துகொண்டு திடீரென வெளிக் கிளம்பிற்று. (71)

பிரபுவே, கோபத்தைத் தணித்தருளுக; தணித்தருளுக என்று விண்ணவர் யாவரும் வானத்திலிருந்து விண்ணப்பம் செய்துகொண்டிருக்கையிலேயே, பவனாது கண்ணினின்று பிறந்த அந்நெருப்பு மதனனைச் சாம்பராக்கி விட்டது. (72)

அப்பொழுது நேர்ந்த கடுந்துயரத்தால் ரதி, ஐம்பொறிகளும் தத்தம் தொழிலைச் செய்யமுடியாமல் அடங்கிக்கிடக்கும் வண்ணம் மூர்ச்சையடைந்தாள். அப்பொழுது அவள் சிறிது போது பிரஜ்ஞையிழந்து தன் கணவனுக்கு நிகழ்ந்த கேட்டை உணரமுடியாதவளாயிருந்தமையால், அந்த மூர்ச்சை அவளுக்கு உபகாரம் செய்ததுபோலாயிற்று. (73)

---

72. "பவநேத்ரஜன்மா பஸ்மாவசேஷம் மதனம் சகார" என்பது மூலம். "பவ" என்ற பதத்திற்கு படைப்பவன் என்பது பொருள். மதனன் என்றால் மதம்பிடித்தவன், அல்லது மதம்பிடிக்கும்படி செய்கிறவன் என்பது பொருள். "இங்குச் சாமதரமானமையால் "ஸம்ஹரிகின்றவன்" என்ற பொருள்கொண்ட ஹரபதத்தாலே பரமசிவனைப் பேசவேண்டுமேயன்றி "படைப்பவன்" என்ற பொருளைத் தரும் "பவ" பதத்தை இங்குப் பிரயோகித்தது உசிதமன்று" என க்ஷேமேந்திரன் என்கிறான். சிவனார் பவனாயிருந்தும், அவரும் பொறுத்தருளமுடியாதபடி தவத்தைக் கெடுக்க காமன் மதனனாய் வந்தபடியால், அவனை நல்வழிப்படுத்த இவ்வாறு செய்ய நேரிட்டது என்பதையும், இப்பொழுது ஹரனான அப்பெருமானார், ரதி முதலியவருடைய வேண்டுகோளுக்கு இணங்கித் தமது விவாகம் முடிந்தவுடன் மன்மதனை மறுபடியும் பிழைப்பித்துப் பவனாகின்றார் என்பதையும் தொனிப்பிக்க வேண்டியே மஹாகவி இங்குப் பவபதத்தைப் பிரயோகித்திருக்கின்றார் என்பது எமது கொள்கை. "ஜிதேந்திரியர்கள், இடிக்கும் அமுதத்திற்கும் காரணமாக நிற்பார்கள்." என்று நமது கவியே நான்காம் ஸர்க்கத்தில் கூறுகின்றார். இங்கு நான்காம் ஸர்க்கம் நாற்பத்திரண்டாம் செய்யுளையும், ஏழாம் ஸர்க்கம் தொண்ணூற்று மூன்றாம் செய்யுளையும் உய்த்து நோக்கினால் இது புலப்படும்.

73. மூலத்திலுள்ள "அபிஷங்க" பதத்தை அவமானம் என்று

இடி பெரு மரத்தை அழிப்பதுபோலத் தபஸ்வியான பூத பதி தமது தவத்திற்கு இடையூறாக நின்ற அக் காமனைக் கடுக அழித்து, ஸ்திரீகள் அடுத்திருத்தலையே ஒழித்துவிடக் கருதி பூதங்களுடன் மறைந்துபோனார். (74)

மலைமகளும், தலை சிறந்த தன் தகப்பனாது விருப்பமும் அழகிய தனது உருவமும் பாழாய்ப்போனமையை எண்ணியும், தோழிகளது எதிரில் இவ்வாறு நிகழ்ந்துவிட்டதே என்று பெரிதும் வெட்கியும், ஒன்றும் தோன்றாதவளாய்த் திகைப்புடன் மிகு பிரயாஸப்பட்டுத் தன்னில்லம் செல்லத் தொடங்கினாள்.

உடனே இமவான், ருத்திரனுடைய கோபத்தைக் கண்டு பயந்து கண்களை மூடிக்கொண்டு இரங்கவேண்டிய நிலைமையிலிருந்த தனது பெண்ணை, ஐராவதம தாமரைக் கொடியைத் தனது தந்தங்களிற் தாங்கி நிற்பதைப்போலத் தன் கைகளிற் தாங்கிக் கொண்டு, உடம்பு நீளுமாறு விரைந்து வந்தவழியே சென்றனன். (76)

மூன்றாம் ஸர்க்கம முற்றிற்று.

---

பொருளில் வியாகரிக்கின்றார் மல்லிநாதர். "ஸா லுப்தஸம்ஜ்ஞா" என்ற ரகுவம்சம் பதினான்காம் ஸர்க்கம் ஐம்பத்தாறாம் செய்யுள் இங்கு நினைக்கற்பாலது.

76. பருத்து வெளுத்த தேஹமுள்ள இமவான் திரண்டுருண்ட தன் கைகளில் கண்மூடியிருக்கும் மெல்லியளான பார்வதியைத் தாங்கிப்போவதை, ஐராவதம் தன் தந்தங்களில் மலர்குவிந்த தாமரைக் கொடியைத் தாங்கிப்போவதோடு ஒப்பிட்டுப்பார்க்க நமது மஹாகவிக்கு மட்டுமே கவிதைக் கண் உளது.

மூன்றாம் ஸர்க்கம் முற்றிற்று.

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS